janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 டிசம்பர் 25 - டிசம்பர் 31 | விலை: ரூ.15 | 28 பக்கங்கள் | இதழ் 38

டிசம்பர் 26 1925 சிறப்பிதழ்

**டிச. 26**

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி துவக்கநாள்
## தோழர் இரா.நல்லகண்ணு பிறந்தநாள்
## தோழர் கே.டி.கே. தங்கமணி நினைவுநாள்

ஒன்றிய அரசே!

**அரசியலமைப்பு - மதச்சார்பின்மை**
**மாநில உரிமைகளுக்கு எதிராக செயல்படும்**

# தமிழக ஆளுநர் ரவியை திரும்பப் பெறு!

டிசம்பர் 29 2022




## ஆளுநர் மாளிகை
# முற்றுகை

ஆதரிப்பீர்! பங்கேற்பீர்!

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

தமிழ்நாடு மாநிலக்குழு

ஒன்றிய அரசே!

# ஆளுநரை திரும்பப் பெறு!

டிசம்பர் 29
காலை 10 மணி
ஆளுநர் மாளிகை முற்றுகை!

பேரணியை தொடக்கி வைத்தல்

மூத்த தலைவர், தகைசால் தமிழர் தோழர் **இரா.நல்லகண்ணு**

தலைமை

தோழர் **டி.ராஜா**
பொதுச் செயலாளர்

தோழர் **இரா.முத்தரசன்**
மாநிலச் செயலாளர்

பங்கேற்கும் தோழர்கள்


கே.சுப்பராயன் எம்.பி., எம்.செல்வராஜ் எம்.பி.,
நா.பெரியசாமி மு.வீரபாண்டியன் எம்.ஆறுமுகம்
டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ. க.மாரிமுத்து எம்.எல்.ஏ.
மற்றும் – மாநில, மாவட்ட, ஒன்றிய, கிளை நிர்வாகிகள்

பேரணி தொடங்கும் இடம் : குயவர் தெரு, சைதாப்பேட்டை

அலைகடலென ஆர்ப்பரித்து அணிதிரண்டு வாரீர்! வாரீர்!

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி** தமிழ்நாடு மாநிலக்குழு





இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்கள்


இரெ. ஞானமோகன், கா. சித்ரகலா, கு. பிரேமா, மு. மாரியம்மாள்,
வெ. இந்திரா வெள்ளைச்சாமி, ம. பத்மா,


ஜனசக்தி சிறப்பிதழ் மலர் சிறக்க வாழ்த்துக்கள்!



# அ. பாஸ்கர்

ஒன்றியக்குழு தலைவர்,
திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம்


டிசம்பர்
26
1925
லட்சியத்தில் உறுதியாய்
நின்று போராடாமல் அடிமைச்
சங்கிலியை உடைக்க முடியாது
– ம.சிங்காரவேலர்
க.மாரிமுத்து எம்.எல்.ஏ.
திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதி
திருவாரூர் மாவட்டம்





ஒன்றியக்குழு உறுப்பினர்கள்

ஜெ.சுசிலா, ம.சாந்தி, பா.சாந்தி, ர.ரேகா, ப.சரண்யா, சே.பூங்கோதை, ப.சுவேதா, நா.மணிமேகலை



ஜனசக்தி சிறப்பிதழ்

மலர் சிறக்க வாழ்த்துக்கள்!

# மணிமேகலை முருகேசன்

ஒன்றியக்குழு தலைவர்
கோட்டூர் ஊராட்சி ஒன்றியம்



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி துவக்க தினம்
வாழ்த்துக்களுடன் ...









M.D. மோகன்
மாமன்ற உறுப்பினர்,
53-வது வார்டு கோவை மாநகராட்சி,
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி,
மாமன்ற குழு செயலாளர்.

கோவை கிழக்கு மண்டலம்



Cell : 94887 10087
94444 30123
vetriepolymers@yahoo.in




மலர் சிறக்க வாழ்த்துக்கள்

G. அஜய்குமார்

Vetrie TM

# வெற்றி பாலிமர்ஸ்

VETRIE TM பிவிசி பைப்ஸ்


1/2" முதல் 12" வரை தரமான PVC & HDPE பைப் தயாரிப்பாளர்கள்

டீலர்

* GI பைப்ஸ் & பிட்டிங்ஸ்
* CPVC பைப்ஸ் & பிட்டிங்ஸ்
* PVC & SWR பிட்டிங்ஸ்
* HDPE ஹோஸஸ்
* வாட்டர் டேங்க்ஸ்
* CP பாத்ரூம் பிட்டிங்ஸ்
* கன் மெட்டல் வால்வ்ஸ்
* பம்ப்ஸ்
* சானிடரி வேர்ஸ்
* எலக்ட்ரிக்கல் பொருட்கள்
* போல்டுகள், நட்டுகள்
* ஹார்டுவேர்ஸ்

150, ஓமலூர் மெயின் ரோடு, மாமாங்கம்,
சேலம் - 636 302.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கான்பூர் முதலாவது அமைப்பு மாநாடு



**இந்த மாநாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது மத்தியக் கமிட்டி உருவாக்கப்பட்டது. முதலாவது அமைப்பு விதிகளையும் மாநாடு உருவாக்கியது.**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருக்கொள்வதற்கு முன்பே அதன் கழுத்து நெரிக்கப்பட்டது. 1924ம் ஆண்டில் மார்ச் மாதம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடங்குவதற்கு முன்பே கான்பூரில் "போல்ஷ்விக் சதி" என்று வழக்கு தொடுக்கப்பட்டது. இது தான் கான்பூர் சதி வழக்கு.

**கான்பூர் சதிவழக்கு**

பிரிட்டிஷ் மன்னரின் அரசாளும் உரிமையைப் பறிக்க சதி, போல்ஷ்விக் உதவியோடு அரசியல் பயிற்சியும், ஆயுதப் பயிற்சியும் நடைபெறுதல் போன்ற காரணங்கள் கூறப்பட்டன. 1922–23 களில் பெஷாவர் சதி வழக்கின் போதும் இதே காரணங்கள் தான் கூறப்பட்டன.

"சமுதாயம் பழமையின் நுகத்தடியில் அமுக்கப்பட்டு, கொடுமைகளுக்கு மக்கள் உள்ளாக்கப்பட்டால் மக்களின், உள்ஆற்றல் தட்டி எழுப்பப்பட்டு புரட்சி வெடிப்பது தவிர்க்க முடியாதது என்பது வரலாற்று உண்மை. இதில் நாங்கள் மக்களைத் தட்டி எழுப்பும் புரட்சியாளர்களாகச் செயல்பட்டது உண்மை"

"அடக்குமுறை ஆங்கிலேய அரசின் உரிமையானால் புரட்சி செய்வது புரட்சியாளர்களின் உரிமை" என்றுநீதிமன்றங்களில்கம்யூனிஸ்ட்டுகள் முழங்கினார்கள்.

1924ம் ஆண்டு மே மாதம் முடிந்தது. எஸ்.ஏ.உஸ்மானி, முசாபர் அகமது, குலாம் உசேன், நளினி தாஸ் குப்தா ஆகியோ ருக்கு 4 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டது. சிங்கார வேலருக்கு உடல் நிலை சரி யில்லாததால் அவர் விடுதலை செய்யப்பட்டார். எம்.என்.ராய் தலைமறைவாகி விட்டார். பின்பு 1931ல் கைதாகி 12 ஆண்டுகள் தண்டனை பெற்று 6 ஆண் டுகளில் விடுதலையானார்.

கான்பூர் சதிவழக்கு இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி உருவாவதை இந்திய மக்களுக்கு எடுத்துக் காட்டியது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு மாநாடு 1925ல் டிசம்பர் மாதம் 26ம் தேதி உத்திரபிரதேச மாநிலம் கான்பூரில் கூடியது.

**கொள்கைகள் உருவாக்கம்**

"கம்யூனிஸ்டுகள் நிலைமைகளைப் புரிந்து கொள்ளவில்லை. இந்தியப் பிரச்சனைகளை கம்யூனிஸ்டுகளால் தீர்க்க முடியாது. அவர்கள் ரஷ்யா, சீனா அடிப்படையைக் கடைப்பிடிப்பவர்கள். பொருளாதாரப் போராட்டத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பவர்கள். அனைத்திற்கும் அதுவே தீர்வு என்று வாதிடுவார்கள்.

மதம், சாதி, இனம், மொழி என்பவை கம்யூனிஸ்ட்களின் வேலைத் திட்டங்களில் இருந்ததில்லை. எனவே இந்தியாவில் கம்யூனிஸ்ட்டுகள் வெற்றி பெற முடியாது".....

மார்க்சியம் விடுதலைக்கானதாக இருப்பினும் இனம் மற்றும் ஒடுக்குறை, சாதி, போன்ற வர்க்க மற்ற வடிவங்கள் பற்றி குறைபாடுகள் கொண்டதே"..

கம்யூனிஸ்ட்டுகள் மீதும், மார்க்சியத்தின் மீதும் இவ்வாறு தொடர்ந்து எழுப்பப்பட்டு வரும் விமர்சனங்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது அமைப்பு மாநாடு தகுந்த பதிலடி கொடுத்துள்ளது !

இந்த முதலாவது அமைப்பு மாநாட்டிற்கு தலைமை ஏற்ற சிங்காரவேலர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது கொள்கை அறிக்கையை தனது தலைமை உரையாக அறிவித்தார்.

**கம்யூனிஸ்டுகளின் இறுதி லட்சியம்**

- மூலதனத்தின் ஆதிக்கத்தை ஒழிப்பது,
- போர்கள் இல்லாமல் செய்வது,
- எல்லா நாடுகளையும் ஒன்று சேர்த்து ஒரு ஜனநாயக கூட்டுறவுப் படையை உருவாக்குவது
- இந்தியாவில் கம்யூனிஸ்ட்களின் உடனடி நோக்கம்
- இந்தியாவின் சாமான்ய மக்களின் விடுதலைக்காகப் போராடுவது
- தொழிலாளர், விவசாயிகள் மீதான ஒடுக்குமுறைக்கு முடிவு கட்டுவது
- அரசியலிலும், பொருளாதார வாழ்விலும் சாதிய வேறுபாடுகளை ஒழிப்பது ஆகும்.
- அரசியல் விடுதலை, பொருளாதார விடுதலை, சமூக விடுதலை என்ற முப்பெரும் லட்சியங்களே இந்தியக் கம்யூனிஸ்டுகளின் கடமை ஆகும்.

கம்யூனிஸ்ட் கட்சி நாட்டில் பல குழுக்களாகச் செயல்பட்டு கருக்கொண்ட காலம் தொட்டே இக்கொள்கைகள் உருவாகின.

**சிங்காரவேலரின் தலைமை உரை**

சிங்காரவேலரின் தலைமை உரை அமெரிக்காவின் சுதந்திரக் கவிஞன் வால்ட் விட்மன் கவிதை வரிகளை மேற்கோள் காட்டித் துவங்குகிறது.

"விடுதலைக்காக உயிர்ப்பலியானவர்களின் புதை குழியில் இருந்தே விடுதலைக்கான விதைகள் வளர்கின்றன" என்ற கம்பீரமான வரிகள் மூலம் புரட்சியாளர்களுக்கு அஞ்சலி செலுத்தப்படுகிறது.

சிங்கார வேலரின் தலைமை உரை தொலை நோக்கான கம்யூனிஸ்ட் அரசியல் பார்வையை இந்தியத் தன்மையிலான மார்க்சிய வளர்ச்சியை துவக்கி வைத்தது.

"தத்துவ ஞானிகள் உலகை வியாக்கியானம் செய்கின்றனர். ஆனால் அந்த உலகை மாற்றி அமைப்பது தான் நமது நோக்கம்" என்ற மார்க்சின் குறிக்கோளின் அடிப்படையில் இந்திய அரசியல், பொருளாதார சமூக நிலைமைகளுக்குப் பொருத்தமான வகையில் தேசிய இயக்கத்திற்கு கோரிக்கைகள் மற்றும் செயல்பாட்டுக்கான ஒரு வேலைத் திட்டத்தையும் மாநாடு முன் வைத்தது.

எங்கிருந்தோ இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பிறந்துவிடவில்லை. இந்திய நிலைகளில் உருவான வரலாற்றுக் கட்டாயமாகவே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உருவானது. அடித்தளமிட்ட இந்த தினமே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் துவக்க நாளாக ஒன்றுபட்ட கட்சி ஒருமனதாக முடிவெடுத்தது.

# தமிழ்நாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தோற்றம்

**தேசவிடுதலை இயக்கம், பாட்டாளி வர்க்க இயக்கம், சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றோடு இணைந்த வகையில் தமிழ்நாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் உருப்பெற்றது.**

1925 டிசம்பர் 26ல் கான்பூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பு ரீதியாக உருவாக்கப்பட்டபோது, அந்த துவக்கத்திற்கு தலைமை தாங்கி, கொள்கை நிலையை வெளியிட்ட ம.சிங்காரவேலர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் என்றாலும், அன்றைய சூழலில் தமிழ் நாட்டில் அமைப்பு ரீதியாக கட்சி உருவாகவில்லை.

1905ல் நடைபெற்ற முதலாவது ருஷ்யப் புரட்சியை பாரதி ஆதரித்தார். 1917ல் நடைபெற்ற சோலிசப் புரட்சியை பாரதி வரவேற்றார். தேச விடுதலை என்பதே 'சமரச சன்மார்க்கம் என்றார் தியாகச் செம்மல் சுப்பிரமணிய சிவா. 1920ல் திரு.வி.க. தனது நவசக்தி ஏட்டை துவங்கி, ஜனநாயகம், தொழிலாளர் நலன், பெண் விடுதலை, சாதி ஒழிப்பு, இந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கொண்ட சமதர்ம சன்மார்க்கத்தை லட்சியமாக பிரகடனப் படுத்தினார்.

முதலாம் உலகப் போர் முடிந்தவுடன் எம்.பி.டி. ஆச்சாரியா மாஸ்கோ சென்று லெனினைச் சந்தித்தார். 1921ல் சிங்கார வேலர் காந்திஜிக்கு பகிரங்கக் கடிதம் எழுதி, இந்திய விடுத லையின் லட்சியம் சமதர்மமாகவே இருக்க முடியும்' என பிரகட னப்படுத்தினார்.

1920களில் சமதர்மக் கருத்துக்களை சிங்காரவேலர், திரு.வி.க. சர்க்கரைச் செட்டியார், சுப்பிரமணிய சிவா போன்றோர் பரப்பினர். சமதர்மத்திற்கான தேடல் நிறைந்த காலம்.

1923 ஆம் ஆண்டு பாட்டாளி வர்க்கம் போராடிப் பெற்ற உரிமைத் திருநாளான மேதினம் இந்தியாவிலேயே முதன் முதலாக சென்னையில் சிங்கார வேலரால் கொண்டாடப்பட்டது.

1924ம் ஆண்டு மாமேதை லெனின் மறைந்த போது சிங் கார வேலர் நடத்திய லேபர் கிஸான் கெஸட்டில் அஞ்சலி செலுத் தியதோடு அஞ்சலி கட்டுரையையும் எழுதினார்.

1925ம் ஆண்டு கான்பூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் அமைப்புரீதியாக உருவானது; ஆயினும் தமிழ்நாட்டில் கட்சி அமைப்பு உருவாகி விடவில்லை, அதற்காக 12 ஆண்டுகள் பாடுபட வேண்டியிருந்தது. கட்சி அமைப்பு உருவாகவும், அரசியல் கொள்கை வளரவும் சிங்காரவேலர் அயராது பாடுபட்டார்.

தந்தைப் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தோடு சிங்கார வேலர் தீவிரமாகப் பணியாற்றினார். சிங்காரவேலர் – பெரியார் உறவு, பெரியாரை சமதர்மம் நோக்கி திருப்பியது. பெரியார் சோவியத் யூனியனுக்கு சென்று திரும்பியதன் விளைவாக சோசலிசக் கருத்துக்கள் மீது அவருக்கு மேலும் ஆர்வம் ஏற்பட்டது.

1932 டிசம்பரில் ஈரோட்டில் பெரியாரின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சுயமரியாதை சமதர்மக் கட்சி என்ற அமைப்பை உருவாக்குவதற்கான திட்டத்தை சிங்காரவேலர் முன் மொழிந்தார். அது ஈரோட்டுத் திட்டம் என்று அழைக்கப்பட்டது.

இந்தியாவுக்கு முழு விடுதலை, தேசக் கடன்கள் முழுவதும் ரத்து, தொழில்சாலைகள், வங்கிகள், ரயில்வே ஆகியவை தேசியமயம், காடுகள் விவசாய நிலம் மக்களின் உரிமை, விவசாய கடன் ரத்து, ஏழு மணிநேர வேலை, சுதேச சமஸ்தானங்களை ஒழித்தல், இந்தியாவில் தொழிலாளர் விவசாயிகள் ஆட்சியை கொண்டு வருதல், இவைகள் தான் ஈரோட்டுத் திட்டம்' இத்திட்டத்தை விளக்கி தமிழகமெங்கும் சுயமரியாதை சமதர்ம மாநாடுகள் நடைபெற்றன. பெரியார், சிங்காரவேலர், ஜீவானந்தம் ஆகியோர் அயராது பாடுபட்டு தமிழகம் முழுவதும் சுயமரியாதை சமதர்ம இயக்கத்தின் கிளைகளை உருவாக்கினர்.

சுயமரியாதை இயக்கத்திற்குள் சமதர்மப் போக்கை விரும் பாதவர்கள் ஆங்கிலேயரின் ஆட்சியை பகைத்துக் கொள்ளாமல், சமூக சீர்திருத்தங்களை ஆதரித்தால் போதும் என்று பெரியாரை வலியுறுத்தி வந்தனர்.

பெரியார் கைது, பெரியாரின் நீதிக்கட்சி ஆதரவு, நீதிக் கட்சியின் வற்புறுத்தல் இவைகளால் பெரியார் ஈரோட்டுத் திட்டத்தை கைவிட்டார். 1936 பிப்ரவரியில் திருத்துறைப்பூண்டியில், கூடிய மாநாட்டில் உருவான சுயமரியாதை சமதர்ம கட்சி 1936 நவம்பரில் திருச்சியில் கூடிய மாநாட்டில் கலைக்கப்பட்டு, காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியுடன் இணைவது என்று முடிவெடுக்கப்பட்டது.

1934ல் தடைசெய்யப்பட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தலைமறைவாக செயல்பட்டு கொண்டு இருந்தது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் இணைந்து பணியாற்றுவது என முடிவு செய்தது.

1934ல் ஜூலை மாதம் ஹைதர்கான் தலைமறைவாக சென்னைக்கு வந்து கட்சியை அமைப்பு ரீதியாகக் கட்டினார்.

**சென்னை ஜார்ஜ் கோட்டையில் பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடியை இரவோடு இரவாக இறக்கிவிட்டு தேசியக் கொடியை ஏற்றிய பாஷ்யம் என்ற ஆர்யாவும் அமிர்ஹைதர் ஹானுடன் தொடர்பு கொண்டார். இவர்தான் சென்னை நகரத்தில் கட்சிக்கு முதல் செயலாளராக இருந்தார்.**

சென்னையில் தங்கியிருந்த தோழர் சுந்தரையா பாண்டிச்சேரி, வ.சுப்பையா ஆகியோருடன் அமீர் ஹைதர்கான் தொடர்பு கொண் டார்.

1936 ல் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் ஜீவா, சீனிவாசராவ், பி.ராமமூர்த்தி, எ.எஸ்.கே. அய்யங்கார், கே.முருகேசன், இளங்கோ போன்றோர் செயலாற்றினார்.

1936ம் பம்பாயிலிருந்து எஸ்.வி.காட்டே நாடு கடத்தப்பட்டு சென்னைக்கு வந்தார். இவரும் தமிழ்நாட்டில் கட்சி அமைப்பை உருவாக்க வழி காட்டினார். இவரின் வழிகாட்டுதல்களின் கீழ் பி.சீனிவாசராவ், ப.ஜீவானந்தம், பி. ராமமூர்த்தி, சி.எஸ். சுப்பிரமணியம், ஏ.எஸ்.கே.அய்யங்கார், கே.முருகேசன் ஆகிய தலைவர்கள் பணியாற்றினர். இவர்கள் பங்கேற்ற அமைப்பு கம்யூனிஸ்ட் "செல்" என்று அழைக் கப்பட்டது. இதற்கு செயலாளர் என்று யாரும் கிடையாது. கூட்ட நிகழ்ச்சிகளை பதிவேடு எழுதுபவரே செயலாளராக கருதப்பட்டார். தோழர் சி.சுப்பிரமணியம் இந்தப் பணியை செய்ததால் அவரே செயலாளராக இருந்தார்.

1936ம் ஆண்டு விவசாய சங்கம் உருவாக்கப்பட்டது. அதே ஆண்டில் சென்னை மாணவர் சங்கமும் துவக்கப்பட்டது. 1937ல் ஜனசக்தி துவங்கப்பட்டது.

1936–38ம் ஆண்டுகளில் தமிழகத்தில் கட்சியின் கட்டமைப்பு அமைப்பு ரீதியாக உருவாக்கப்பட்டு விட்டது. பல துறைகளில் கட்சி செயல்பட ஆரம்பித்தது. தொழிலாளர்கள் போராட்டம், விவசாயிகள் போராட்டம், மாணவர்கள் போராட்டம் என பல நிலைகளில் போராட்டங்கள் நடைபெற்றன.

1938 ம் ஆண்டு இங்கிலாந்தில் கல்வி பயின்று கொண்டிருந்த மோகன் குமாரமங்கலம், சி.எஸ் சுப்பிரமணியம் ஆகியோர் கம்யூனிஸ்ட்களுடன் இணைந்து இயக்க வேலைகளைத் தீவிரப்படுத் தினர். அப்போது அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பட்டம் படித்த சுப்பிரமணிய சர்மாவும், பி.ராமமூர்த்தியும் கட்சியில் இணைந்து செயலாற்றினர்.

1939 கட்சி மீது தடை விதிக்கப்பட்ட போதும் கட்சியின் வெகு ஜனப் போராட்டங்களை தடுத்து நிறுத்த முடியவில்லை. தமிழ கத்தில் இனியும் கட்சியை வளரவிடாமல் தடுக்கும் நோக்கோடு 1940–41 சென்னை சதிவழக்கு போடப்பட்டது. இதைத் தொடர்ந்து கோவை சதி வழக்கு, நெல்லை சதிவழக்கு என்று பலப்பல சதி வழக்குகள் தொடர்ந்தது.

AIBEA



With Best Compliments

# Canara Bank Employees' Co-op. Thrift & Credit Society Ltd

Regd. No. X-372

AIBEA

"A.K. Nayak Bhavan", 2nd Floor,
No. 14, Second Line Beach,
Chennai - 600 001.

AIBEA





**எம்.சுதர்சன்**

நகராட்சி துணைத் தலைவர்

**கூத்தாநல்லூர் நகராட்சி**

திருவாரூர் மாவட்டம்



புதியதோர் உலகம் செய்வோம்-கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்...
பொதுஉடைமைக் கொள்கை திசை எட்டும் சேர்ப்போம்...
புனிதமோடு அதை எங்கள் உயிர் என்று காப்போம்...



வாழ்த்துக்களுடன்...

**துரை அருள்ராஜன்**, M.A., B.Ed., L.L.B.,
மாவட்ட செயலாளர்,
அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம்,
திருவாரூர் மாவட்டக்குழு.
99522 13636

**வனிதா அருள்ராஜன்**, M.Sc., M.Pill.,
ஒன்றிய துணை பெருந்தலைவர்
ஊராட்சி ஒன்றியம்
மன்னார்குடி
63823 33898




## 1925 முதல் 2022 வரை கட்சிக் காங்கிரஸில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுச் செயலாளர்கள்



| மாநாடு | ஆண்டு | மாநிலம் | பொதுச் செயலாளர் |
|---|---|---|---|
| அமைப்பு மாநாடு | 1925 டிசம்பர் 25, 26 | உ.பி., கான்பூர் | பாகர்ஹட்டா, எஸ்.வி.காட்டே |
| 1–வது காங்கிரஸ் | 1943 மே 23 – ஜுன் 31 | மகாராஷ்டிர பம்பாய் | பி.சி.ஷோசி |
| 2–வது காங்கிரஸ் | 1948 பிப். 28 – மார்ச் 7 | மேற்கு வங்கம் கொல்கத்தா | பி.டி.ரணதேவ் |
| 3–வது காங்கிரஸ் | 1953 டிச. 27 ஜன. 3 | மதுரை | அஜய் கோஷ் |
| 4–வது காங்கிரஸ் | 1956 ஏப். 16 – 29 | கேரளா பாலக்காடு | அஜய் கோஷ் |
| 5–வது காங்கிரஸ் (சிறப்பு மாநாடு) | 1958 ஏப்ரல் 6 – 13 வரை | பஞ்சாப் அமிர்தசரஸ் | அஜய் கோஷ் |
| 6–வது காங்கிரஸ் | 1961 ஏப்ரல் 7 –13 | ஆந்திரா விஜயவாடா | அஜய் கோஷ் |
| 7–வது காங்கிரஸ் | 1964 டிசம்பர் 13–23 | மகாராஷ்டிர பம்பாய் | எஸ்.ஏ.டாங்கே தலைவர், சி.ராஜேஸ்வரராவ் |
| 8–வது காங்கிரஸ் | 1968 பிப். 7 –15 | பீகார் பாட்னா | எஸ்.ஏ.டாங்கே தலைவர், சி.ராஜேஸ்வரராவ் |
| 9–வது காங்கிரஸ் | 1971 அக். 3 –10 | கேரளா கொச்சி | எஸ்.ஏ.டாங்கே தலைவர், சி.ராஜேஸ்வரராவ் |
| 10–வது காங்கிரஸ் | 1975 ஜன. 27 – பிப். 2 | ஆந்திரா விஜயவாடா | எஸ்.ஏ.டாங்கே தலைவர், சி.ராஜேஸ்வரராவ் |
| 11–வது காங்கிரஸ் | 1978 மார்ச் 31 ஏப்ரல் 7 | பஞ்சாப் படிண்டா | எஸ்.ஏ.டாங்கே, தலைவர் சி.ராஜேஸ்வரராவ் |
| 12–வது காங்கிரஸ் | 1982 மார்ச் 21 –28 | உ.பி.வாரணாசி | சி.ராஜேஸ்வரராவ் |
| 13–வது காங்கிரஸ் | 1986 மார்ச் 12– 17 | பீகார் பாட்னா | சி.ராஜேஸ்வரராவ் |
| 14–வது காங்கிரஸ் | 1989 மார்ச் 6 –12 | மேற்கு வங்கம் கல்கத்தா | சி.ராஜேஸ்வரராவ் |
| 15–வது காங்கிரஸ் | 1992 ஏப்ரல் 10–14 | ஆந்திரா ஹைதராபாத் | இந்திரஜித் குப்தா |
| 16–வது காங்கிரஸ் | 1995 அக்டோபர் 7–11 | புதுடெல்லி | இந்திரஜித் குப்தா |
| 17–வது காங்கிரஸ் | 1998 செப். 14 – 19 | தமிழ்நாடு சென்னை | ஏ.பி.பரதன் |
| 18–வது காங்கிரஸ் | 2002 மார்ச் 26–31 | கேரளம் திருவனந்தபுரம் | ஏ.பி.பரதன் |
| 19–வது காங்கிரஸ் | 2005 மார்ச் 29 – ஏப்ரல் 3 | பஞ்சாப் சண்டிகர் | ஏ.பி.பரதன் |
| 20–வது காங்கிரஸ் | 2008 மார்ச் 23 – 27 | ஆந்திரா ஹைதராபாத் | ஏ.பி.பரதன் |
| 21–வது காங்கிரஸ் | 2012 மார்ச் 27 – 31 | பீகார் பாட்னா | சுதாகர் ரெட்டி |
| 22–வது காங்கிரஸ் | 2015 மார்ச் 25 – 29 | தமிழ்நாடு பாண்டி | சுதாகர் ரெட்டி |
| 23–வது காங்கிரஸ் | 2018 ஏப். 25 – 29 | கேரளா கொல்லம் | சுதாகர் ரெட்டி |
| தேசிய கவுன்சில் | | 2021 ஜூலை 19 | டி.ராஜா |
| 24–வது காங்கிரஸ் | 2022 அக். 14 – 18 | ஆந்திரா விஜயவாடா | டி.ராஜா |

- 1925 பாகர்ஹட்டா நீக்கப்பட்டு எஸ்.வி.காட்டே பொதுச் செயலாளராகச் செயல்பட்டார்.
- 1931 முதல் 1933 வரை மீரத் சதி வழக்கிற்கு பின்பு எஸ்.வி.தேஷ்பாண்டே செயலாளராக இருந்தார். சிறையில் இருந்த தோழர்களுக்கு ஜி.அதிகாரி செயலாளராக இருந்தார்.
- 1933 பின்பு மீரத் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு கல்கத்தாவில் நடந்த கூட்டத்தில் டாக்டர் ஜி.அதிகாரி பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.
- 1935 டிசம்பர் இறுதியில் பி.ஷி.ஷோசி பொதுச் செயலாளர் பொறுப்பை ஏற்றார். 1948 வரை பொதுச் செயலாளராக நீடித்தார்.
- 1950 ஜூன் கல்கத்தா கூட்டம் சி.ராஜேஸ்வரராவ் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்
- 1962 ஏப்ரல் 23 முதல் 29 வரை அஜய் கோஷ் மரணத்திற்கு பிறகு தேசியக்குழு கூட்டம் எஸ்.ஏ.டாங்கே தலைவர், இ.எம்.எஸ்.நம்பூதிரிபாடு பொதுச் செயலாளர்
- 1964 ஏப்ரல் 11 அன்று நடைபெற்ற தேசியக்குழு கூட்டத்திலிருந்து 31 பேருடன் வெளிநடப்பு செய்து சிபிஐ(எம்) என்ற மற்றொரு கட்சியை உருவாக்கினர்,
- 1990 ஏப்ரல் 17 முதல் 19 வரை தேசியக்குழு கூட்டம் இந்திரஜித் குப்தா பொதுச் செயலாளர்
- 1993 மார்ச் 11 முதல் 14 வரை அமைப்பு நிலை மாநாடு கேரளா திருச்சூர்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில மாநாடுகள்





| மாநாடு | ஆண்டு | இடம் | மாநிலச் செயலாளர் |
|---|---|---|---|
| 1-வது மாநாடு | 1951 | சென்னை | பி.ராமமூர்த்தி |
| 2-வது மாநாடு | 1953 நவ.22–29 | பேரூர், கோவை | எம்.ஆர்.வெங்கட்ராமன் |
| 3-வது மாநாடு | 1956 பிப். 12–21 | திண்டுக்கல் | எம்.ஆர்.வெங்கட்ராமன் |
| 4-வது மாநாடு | 1958 (சிறப்பு) | திருச்சி | எம்.ஆர்.வெங்கட்ராமன் |
| 5-வது மாநாடு | 1959 மே. 26–31 | காரைக்குடி | எம்.ஆர்.வெங்கட்ராமன் |
| 6-வது மாநாடு | 1961 | கோவை | எம்.ஆர்.வெங்கட்ராமன் |
| 7-வது மாநாடு | 1962 அக். 29 நவ.4(சிறப்பு) | சென்னை | மணலி சி.கந்தசாமி |
| 8-வது மாநாடு | 1964 | மதுரை | எம்.கல்யாணசுந்தரம் |
| 9-வது மாநாடு | 1968 ஜன. 27–30 | வேலூர் | எம். கல்யாணசுந்தரம் |
| 10-வது மாநாடு | 1971 செப். 9– 12 | திருச்சி | எம்.கல்யாணசுந்தரம் |
| 11-வது மாநாடு | 1974 டிச.26–30 | சென்னை | எம்.கல்யாணசுந்தரம் |
| 12-வது மாநாடு | 1978 மார்ச் 16–19 | கோவை | ப.மாணிக்கம் |
| 13-வது மாநாடு | 1982 மார்ச் 3–7 | இராஜபாளையம் | ப.மாணிக்கம் |
| 14-வது மாநாடு | 1986 பிப்.27 மார்ச் 2 | நெல்லை | ப.மாணிக்கம் |
| 15-வது மாநாடு | 1989 பிப். 23–26 | திருச்சி | ப.மாணிக்கம் |
| 16-வது மாநாடு | 1992 மார்ச் 4–7 | மதுரை | ஆர்.நல்லகண்ணு |
| 17-வது மாநாடு | 1995 செப்.13–16 | சென்னை | ஆர் நல்லகண்ணு |
| 18-வது மாநாடு | 1998 ஜூலை 24–26 | கடலூர் | ஆர்.நல்லகண்ணு |
| 19-வது மாநாடு | 2002 மார்ச் 12–15 | தருமபுரி | ஆர்.நல்லகண்ணு |
| 20-வதுமாநாடு | 2005 மார்ச் 5–8 | திருவாரூர் | தா.பாண்டியன் |
| 21-வது மாநாடு | 2008 பிப்.29 மார்ச் 3 | புதுக்கோட்டை | தா.பாண்டியன் |
| 22-வதுமாநாடு | 2012 பிப்.17–19 | இராஜபாளையம் | தா.பாண்டியன் |
| 23-வதுமாநாடு | 2015 பிப்.25–28 | கோவை | இரா.முத்தரசன் |
| 24-வதுமாநாடு | 2018 மார்ச் 28–31 | மன்னார்குடி | இரா.முத்தரசன் |
| 25-வதுமாநாடு | 2022 ஆகஸ்ட் 6–9 | திருப்பூர் | இரா.முத்தரசன் |

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்ட நாள் பற்றி ஒரு குறிப்பு

சி.பி.ஐ. நிறுவப்பட்ட நாள் குறித்து, 1959 ஆகஸ்ட் வரை, வெவ்வேறு தோழர்கள் வெவ்வேறு ஆண்டுகளையும் தேதிகளையும் கூறி வந்தார்கள். இந்த விவகாரம் பற்றி விவாதித்து, ஒருமனதான முடிவெடுத்து பிரச்சினைக்கு முடிவுகட்ட 1959 ஆகஸ்ட் 18 அன்று சி.பி.ஐ.யின் மத்திய செயற்குழு கூடியது.

அவர்கள் இந்தப் பிரச்சினையைப் பல்வேறு கோணங்களிலும் ஆராய்ந்து, இறுதியில் 1925 டிசம்பர் 26 அன்று கான்பூரில் மாநாடு நடைபெற்ற தேதியே கட்சியின் நிறுவன நாள் என்று முடிவிற்கு வந்தார்கள். அந்தச் சமயத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்ட நாள் பற்றிய தகவலை இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டிருந்தது. கட்சி நிறுவிய நாள் பற்றி முடிவெடுத்த மத்திய செயற்குழுவில், பொதுச் செயலாளர் அஜாய் கோஷ், பி.டி.ரணதிவே, பி.சி.ஜோஷி, எம்.பசவ புன்னையா, இசட்.ஏ.அகமது, எஸ்.ஏ.டாங்கே, ஏ.கே. கோபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகள் (மினிட்ஸ்) பவசபுன்னையாவால் எழுதப்பட்டது. அதில் ‘கட்சியின் நிறுவன நாள் 1925 டிசம்பர் 26, கூட்டத்தில் கலந்து கொண்ட எவரும் வேறு எந்தத் தேதியையும் முன்வைக்கவில்லை’ என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். 1959 ஆகஸ்ட் 20 அன்று ரிவ்யூ ஆஃப் இந்தோனேசியா’ என்ற பத்திரிகையின் ஆசிரியருக்கு பி.டி.ரணதிவே ஒரு கடிதம் எழுதினார்.

இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925 டிசம்பரில் தோற்றுவிக்கப்பட்டது என்று எழுதியிருக்கிறார். அதன்பின் வங்க மாநிலக் குழுவிற்கு 1960ல் இ.எம்.எஸ். எழுதிய கடிதத்தில் இதே கருத்தை பதிவு செய்திருக்கிறார்.

கட்சியின் இந்தக் கருத்தை முஸாபர் அகமதும் வங்காள மாநிலக்குழு தலைமைத் தோழர்களும் ஏற்கவில்லை. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவன நாள் 1920 அக்டோபர் என்று முஸாபர் அகமது வெளியிட்ட புத்தகத்திலுள்ள செய்தியின் அடிப்படையில், 1960ல் கட்சியின் 40வது ஆண்டுவிழாவைக் கொண்டாட வங்காள மாநிலக்குழு விரும்பியது.

ஆனால் இந்த முயற்சிக்கு எதிராக வங்காள மாநிலக் குழுவிற்கு 1960 ஜூன் 10 அன்று அன்றைய பொறுப்பு பொதுச் செயலாளராக இருந்த இ.எம்.எஸ். கடிதம் எழுதியதால், 40வது ஆண்டுவிழா நடத்தும் முயற்சி வெற்றி பெறவில்லை.

### 1920ல் தாஷ்கண்டில் நிறுவப்பட்டது குறித்து

1920 அக்டோபர் 17 அன்று தாஷ்கண்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டபோது எம்.என்.ராய், (எம்.என்.ராயின் முதல் மனைவியும் அமெரிக்க பிரஜையுமான) எவ்லின் ட்ரெண்ட் ராய், அபானி முகர்ஜி, (அபானியின் மனைவியும் வெளிநாட்டு பிரஜையுமான) ரோஸா ஃபிடிங் கோஹாஃப், மொகமத் அலி, மொகமது ஷஃபிக், எம்.பி.டி.ஆச்சார்யா ஆகிய ஏழு பேர் கலந்து கொண்டனர்.

இதுபற்றிய விபரங்கள் ‘தாஷ்கண்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவியது பற்றி’ என்ற தலைப்பில் 1964 அக்டோபர் ‘நியூஏஜ்’ இதழில் டாக்டர் தேவேந்திரநாத் கௌசிக் எழுதிய கட்டுரையில் விரிவாக உள்ளன. இது ஒரு வரலாற்று நிகழ்ச்சி என்பது உண்மையே. ஆனால் அதற்கு அரசியல் முக்கியத்துவம் இல்லை. சில தனிநபர்கள், அவர்களில் சிலர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள், மற்றவர்கள் அயல்நாடுகளைச் சேர்ந்தவர்கள். அயல்நாடு ஒன்றில் கூடி, தங்களை கம்யூனிஸ்ட் கட்சி என்று அழைத்துக் கொண்டனர். கலந்துகொண்ட ஏழு பேரில் இரண்டுபேர் அயல் நாட்டவர். அவர்கள் அனைவரும் தனிநபர்கள். அவர்கள் மக்களின் ஏதாவது ஒரு குழுவையோ, நாட்டின் பகுதியையோ பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. அவ்வாறு தாஷ்கண்டில் சி.பி.ஐ. அமைக்கப்பட்ட விவரம் தாய் மண்ணான இந்தியாவிலிருந்த கட்சியினருக்கு 1950 வரை தெரிந்திருக்கவில்லை.




# தடைகளை தகர்த்து முன்னேறும் பெரும்படை!

பேரன்புமிக்க தோழர்களே!

**நாம், நமது சுய விருப்பப்படி, இணைந்து, உவந்து செயலாற்றி வரும், போர்குணமிக்க, புரட்சிகர கட்சியாம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, வரும் 26.12.2022 ஆம் நாளில். தனது புகழார்ந்த வரலாற்றில் 97 ஆண்டுகளை நிறைவு செய்து, 98 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.**

நமது கட்சி அமைவதற்கு முன்னதாக 1885 ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உருவாகி, 40 ஆண்டுகள் ஆகி இருந்தன. அப்போது காலனி ஆட்சியில் ஆங்கிலேயர்கள் வகித்து வந்த அதிகாரப் பணியிடங்களில் இந்தியர்களையும் நியமிக்க வேண்டும்.காலனி ஆட்சியில் அமைந்த அதிகார கட்டமைப்புக்கு ஆலோசனை கூற அனுமதிக்க வேண்டும் என்பது போன்ற வரம்புக்கு உட்பட்ட சுதந்திரக் (டொமினியன்) கோரிக்கைகளே முன் வைக்கப்பட்டது.

காங்கிரஸ் கட்சியில் அண்ணல் மகாத்மா காந்தி செயல்படத் தொடங்கிய பிறகு. அது படிப்படியாக மக்களியக்கமாக வளர்ந்து வந்தது.

இந்தச் சூழலில் ரஷ்ய நாட்டில், தோழர் லெனின் தலைமையில் இயங்கி வந்த போல்ஷ்விக் கட்சி, ஜார் அரசை வீழ்த்தி, அரசியல் அதிகாரத்தை கைப்பற்றியது

1917 ஆம் ஆண்டு ருஷ்ய நாட்டில் கம்யூனிஸ்டுகள் ஆட்சியில் அமர்ந்ததை மகாகவி பாரதி " யுகப்புரட்சி" என வாழ்த்துக் கூறி வரவேற்றார்.

சென்னை, மும்பை, வங்காளம், பஞ்சாப், லாகூர் என பல்வேறு பகுதிகளில் செயல்பட்டு வந்த கம்யூனிஸ்டுகள் நாட்டிற்கு பரிபூரண விடுதலை வேண்டும் என்று கோரி வந்தனர். இந்தக் கோரிக்கையை காங்கிரஸ் பேரியக்கமும் ஏற்க வேண்டும் என நிர்பந்தித்து வந்தனர்.

எட்டாண்டுகள் போராடியதன் முடிவில் 1929 ஆம் ஆண்டு லாகூர் காங்கிரஸ் மாநாடு "நாட்டிற்கு முழு விடுதலை வேண்டும்" என்ற கோரிக்கையை ஏற்று,



அடுத்த இரண்டாண்டில் நூற்றாண்டு விழாக்காணும் கட்சி சாதித்தது என்ன? அரசியல் அதிகாரத்தை வெல்வது எப்போது? கட்சியை, கட்சியின் கொள்கைகளை பாராட்டி பெருமைப்படுத்தும் மக்கள் உணர்வை அமைப்பு ரீதியாக திரட்ட முடியாதது ஏன்? என்பது போன்ற வினாகள் எழுப்பப்படுகின்றன.

தேர்தலுக்கு, தேர்தல் ஏதாவது ஒரு கூட்டணியில் சேர்ந்து, பிறர் ஆட்சி அமைக்க உதவுகிறீர்களே, கம்யூனிஸ்ட் கட்சி எப்போதுதான் ஆட்சிக்கு வரும் என்றும் கேட்கப்படுகிறது.

இத்தகைய வினாக்களுக்கு விடையளிக்க முடியாத அல்லது இயலாத இயக்கமல்ல இந்திய கம்யூனிஸ்ட் கட்சி.

கட்சி அமைக்கப்பட்ட அடிநாள் தொடங்கி, நாட்டின் நலனுக்கும், நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கும் பாடுபட்டு வரும் பெருமைக்குரிய இயக்கமாகும்.

கட்சி அமைப்பு ரீதியாக உருவாக தொடக்க காலம், அன்னை நாடு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் காலனி நாடாக அடிமைப்பட்டுக் கிடந்தது.

தாய் நாட்டின் விடுதலை முதன்மை கடமையாக இருந்தது.

அதனை அடைவதற்கான இயக்கங்களை மேற்கொள்ளத் தொடங்கியது. இதற்கு உந்துவிசையாகவும், ஊக்க சக்தியாகவும் இருந்தவர்கள் கம்யூனிஸ்டுகள் என்பது வரலாறு நெடுகிலும் பதிந்து கிடக்கிறது.

விடுதலைப் போராட்ட காலத்தில், கம்யூனிஸ்டு கட்சியோ, காங்கிரஸ் அல்லது முஸ்லீம் லீக் போன்ற அமைப்புகளோ தீர்மானம் போட்டவுடன் மக்கள் ஆர்பரித்து, அணி திரண்டு விடவில்லை.

அன்றிருந்த மக்கள் நிலையினை எட்டையபுரத்து புரட்சிக் கவி பாரதி, நெஞ்சு துடிக்கிற உணர்வோடு பதிவு செய்கிறார்.

**"நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த**
**நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்**
**அஞ்சி யஞ்சி சாவார் இவர்**
**அஞ்சாத பொருளில்லை அவனியிலே"**
**"சிப்பாயைக் கண்டஞ்சுவார் ஊர்ச்**
**சேவகன் வருதல்கண்டு மனம்பதைப்பார்**
**துப்பாக்கி கொண்டோருவன் வெகு**
**தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிப்பார்**
**அப்பாலெவனோ செல்வான் அவன்**
**ஆடையைக் கண்டு பயந் தெழுந்துநிற்பார்**
**எப்போதும் கைத்தட்டுவார் இவர்**
**யாரிடத்தும் பூனைகள்போலோங்கிநடப்பார்"**
என்றும்,
**" எண்ணிலா நோயுடையார் இவர்**
**எழுந்து நடக்கவும் வலிமை இலார் பிறர்**
**காட்டிய வழியில் சென்று மாட்டிக் கொள்வார்"**
என்றும் கூறுகிறார்.

துயர நிலையில், துன்பப்பட்ட வாழ்வில் இருந்த நாட்டு மக்களை விடுதலைப் போராட்டத்துக்கு ஆயத்தப் படுத்துவதில் விடுதலைப் போராடட் வீரர்கள் இடைவிடாது ஈடுபட்டனர்.

மனித வாழ்வில் நீடிக்கும் துன்ப, துயரங்கள் , தங்கள் "தலையெழுத்து" என்ற மூட நம்பிக்கை நிலவி வந்த மக்களிடையே சுதந்திர உணர்வை ஊட்டுவது எளிதான ஒன்றா? கடினமான பணிகள் அல்லவா?

ஆம், இந்தக் கடினமான பணிகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, முழுமையாக உணர்ந்த இயக்கமாக ''பரிபூரண விடுதலை'' என்ற முழக்கத்தை பிறக்கும்போதே கம்பீரமாக முன்னெடுத்து வந்தது.

விடுதலைப் போரில் ஈடுபட்ட, அந்த மகத்தான போராட்டத்திற்கு தலைமை தாங்கிய அண்ணால் மகாத்மாக காந்தியை " தேசப் பிதா, தேசத் தந்தை " என அழைத்து பெருமைப் படுத்தியவர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பி.சி.ஜோஷி.

கம்யூனிஸ்டுகள் என்றாலே ஏகாதிபத்திய சக்திகளுக்கு, "சிம்ம சொப்பனமாய்" விளங்கியது.

கட்சி அமைப்புக் கருக் கொண்ட காலத்திலேயே அதனை அழித்தொழிக்க சதிவழக்குகள் போடப்பட்டன. தேசத்துரோகிகள், ஆட்சிக் கவிழ்ப்பு அராஜகவாதிகள் என அவதூறுகள் பரப்பப்பட்டன.

கட்சியின் முன்னணி செயல்வீரர்கள் பலர் கைது செய்யப்பட்டு நான்காண்டு காலம் தண்டிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

கட்சி அமைப்பு சட்டப்பூர்வமாக செயல்பட முடியாது. அது தடை செய்யப்பட்டது. இப்படி பல. நெருக்கடிகளும், அடக்குமுறைகளும் நிறைந்திட்ட சூழலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்கிற பேரியக்கம் அமைப்பாக நிறுவப்பட்டது. என்பதனை எண்ணிப் பார்த்திடல் வேண்டும்.

நாடு முழுவதும் உள்ள சிறை கொட்டடிகளில் கம்யூனிஸ்ட் தோழர்கள் நிரம்பி வழிந்தனர்.

துப்பாக்கி வெடிக்கும் சப்தம் கேட்டால், அதன் குண்டுகளுக்கு , கம்யூனிஸ்டுகள் இரையானார்கள். அல்லது அவர்களது உடல் உருக்குலைக்கப்பட்டு, முடமாக்கப்பட்டனர் என்பது வரலாறாகும்.

தூக்கு மேடை ஏற்றப்பட்ட நேரத்திலும், அதில் உயிர் பறிக்கப்படுமே என எந்த சலனமும் இன்றி, தூக்குக் கயிறுகளை முத்தமிட்ட மாவீரர்கள் கம்யூனிஸ்டுகள்.

அடக்குமுறை கொடுமைகள் கண்டு கொள்கை சமரசம் காணாமல், நெஞ்சத் துணிவை காட்டியவர்கள் கம்யூனிஸ்டுகள்.

கோழையாய் பன்னெடுங்காலம் வாழ்வதைக் காட்டிலும், வீரனாய் ஒரே ஒரு நாள் வாழ்ந்தால் போதும் என்ற வைராக்கியத்துடன் வாழ்ந்து காட்டிய தியாகச் செம்மல்கள் கம்யூனிஸ்டுகள்.

நாட்டின் விடுதலை என்பது சில நபர்களால் நடத்தி முடிந்து விடுவது அல்ல. மாறாக தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் என சமூகத்தின் அனைத்து பகுதி மக்களும் வர்க்க

தொடர்ச்சி 9ம் பக்கம்

8 ம் பக்கத் தொடர்ச்சி

ரீதியாக அணி திரண்டு போராடுவதன் மூலமே சாத்தியம் என்ற பேருண்மையை உணர்ந்து, , அதற்கு செயல் வடிவம் தந்த தேசத் தலைவர்கள்.

அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (ஏஐடியூசி), அகில இந்திய விவசாயிகள் சங்கம் (ஏஐகேஎஸ்) , இந்திய மாதர் தேசிய சம்மேளனம், அனைத்திந்திய மாணவர் பெருமன்றம, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், இப்டா (கலை இலக்கிய அமைப்பு) என நாடு தழுவிய முறையில் வர்க்க, வெகுமக்கள் இயக்கங்களை கட்டமைத்தனர்

அகில இந்திய அளவிலும், மாநில, மாவட்ட, உள்ளூர் அளவிலும் மாபெரும் மக்கள் இயக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பரிபூரண விடுதலை

தொழிலாளர்களுக்கு சங்கம் அமைக்கும் உரிமை, எட்டு மணி நேர வேலை,

வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை,

நிலச் சீர்திருத்தம், நில உச்சவரம்பு சட்டங்கள், கடன் நிவாரணம், உழுபவனுக்கே நிலம், உழைப்பவனுக்கே சோறு

அனைவருக்கும் கல்வி, ஆரோக்கிய வாழ்வுக்கு மருத்துவம்

என கோரிக்கை முழக்கங்கள் முன்வைக்கப்பட்டன.

நாடு தழுவிய இயக்கங்கள், வேலை நிறுத்தங்கள் என போராட்டங்கள் தொடர்ந்தன. அவைகள் வெற்றியும் பெற்றன.

விடுதலைப் போரில் வெற்றி பெற்றோம்! ஆங்கிலேய அந்நியர் ஆட்சி அகற்றப்பட்டது. நாடு விடுதலை பெற்றது.

அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. அரசியல் அமைப்பு அதிகாரத்துடன் நாட்டை வழிநடத்த, பல்வேறு அமைப்புகளும் உருவாக்கப்பட்டன.

1952 முதல் பொதுத் தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு நடைபெற்ற தேர்தல்களில் கம்யூனிஸ்ட் கட்சி மக்கள் ஆதரவைப் பெற்று, நாடாளு மன்றத்தில் எதிர்கட்சியாக செயல்பட்டது.

கேரளா, மேற்குவங்கம், திரிபுரா ஆகிய மூன்று மாநிலங்களில் ஆட்சி அமைக்க முடிந்தது.

நாடாளுமன்றத்திலும், சட்டப்பேரவைகளிலும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் மிகச் சிறப்பாக செயலாற்றி, முன்மாதிரியாக திகழ்ந்து வருகின்றனர்.

காலனி ஆட்சிகாலத்தில் வெள்ளையர்களுக்கு ஆதரவாகவும், அடியாட்களாகவும் குறுநில மன்னர்கள், ஜமீன்தார்கள், நிலப்பிரப்புகள், மடாலயங்கள் செயல்பட்டனர் என்பதை அனைவரும் அறிவர்.

இவர்களின் சமூக ஆதிக்கத்திற்கு எதிராகவும், நில உச்சவரம்பு சட்டம் கோரியும், உழுபவனுக்கு நிலம் சொந்தம், குத்தகை குறைப்பு, குடிமனை பாதுகாப்பு, வீடு என்று தொடர் போராட்டங்கள் கம்யூனிஸ்டுகளால் முன்னெடுக்கப்பட்டன .

இக் கோரிக்கைகள் பெரும்பாலும் வெற்றியும் பெற்றன.

தொழிலாளர்களுக்கான சட்டங்கள், ஊதியம், போனஸ், பணி நிரந்தரம், பணி பாதுகாப்பு போன்ற தொழிலாளர்கள் நலன் காக்கப்பட்டது. பொதுத்துறை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன இதன் மூலம் நாட்டின் சுயசார்பு பொருளாதாரத்துக்கு அடித்தளமிடப்பட்டது.

சமூக அடக்குமுறை கொடுமைகளுக்கு எதிராக, விவசாய உற்பத்தி பொருளுக்கான நியாய விலை நிர்ணயம், கொள்முதல் செய்தலும், விநியோகப் பொறுப்பையும் அரசே ஏற்க வேண்டும் என்பது போன்ற மக்கள் பிரச்சனைகளை முன் வைத்து நடத்திய போராட்டங்கள், அதில் பெற்ற வெற்றிகள் என சாதனைப் பட்டியல்கள் தொடரும்.

விவசாயத் தொழிலாளர்களுக்கான ஒருங்கிணைந்த மத்திய சட்டம், பட்டியலின, பழங்குடி மக்களுக்கு எதிரான சமூக கொடுமைகளுக்கு முடிவு காண நடைபெற்ற போராட்டங்கள் அவைகளில் கிடைத்திட்ட வெற்றிகள் தொடர்கின்றன.

தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், கலைஞர்கள் நலனுக்காக மட்டுமல்லாது, விடுதலை பெற்ற தேசத்தின் எதிர்காலம் குறித்து கவலைப்படும் இயக்கம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி.

முதலாளித்துவ சுரண்டல் முறை முற்றாக ஒழிக்கப்பெற்று, பொதுவுடமை சமுதாயம் காண வேண்டும் என்பதில் சமரசம் இன்றி போராடக்கூடிய ஒரு மகத்தான இயக்கம்.

முதலாளித்துவம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள, அனைத்து அவதாரங்களையும், மாறி, மாறி எடுக்கின்றது. எத்தகைய பகீரத, பல்வேறு சாகசங்களை மேற்கொண்ட போதும், அது வெற்றி பெற முடியவில்லை என்பது மட்டுமல்ல, தொடர்ந்து தோல்விகளை சந்தித்து வருகின்றது.

பல்வேறு தோல்விகளை சந்தித்தபோதும், அவைகளை மூடிமறைக்கவும், அவர்களால்தான் அனைத்தும் சாத்தியம் என்றும், மாற்று எதுவும் இல்லை என முழங்கி வருகிறது.

புதைகுழிக்கு சென்று கொண்டிருக்கும் முதலாளித்துவம், தனது இருப்பை தக்க வைத்துக் கொள்ள, இன வேறுபாட்டை, மத வேறுபாட்டை, மொழி வேறுபாட்டை, சாதி வேறுபாட்டை ஆயுதங்களாக பயன்படுத்தி, பகை வளர்க்கும், வெறுப்பு அரசியலை ஆதரித்து நிற்கிறது.

சமூக அமைதியை சீர்குலைத்து, மனித மோதல்களை உருவாக்கி, அரசியல் ஆதாயம் தேடிவரும் வகுப்புவாத, மதவெறி சக்திகளுடன் முதலாளித்துவம் அணி சேர்ந்து நிற்கிறது.

விடுதலைப் போராட்ட காலத்தில் உருவான "இந்தியா" இன்று மூன்று நாடுகளாக இருப்பதை (இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ்) காண்கின்றோம்.

முதலாளித்துவ சாகசங்களை கண்டு அஞ்சத் தேவையில்லை. ஆனால், நாம் மிக கவனமாக இருந்திட வேண்டும்.

விடுதலைக்கு போராடிய நாம், வெற்றி கண்ட நாம், பல்வேறு மக்கள் பகுதியினருக்காக நடத்திட்ட போராட்டங்களில் வெற்றி கண்ட நாம், இன்று நமது நாட்டின் அதிகாரத்தில் அமர்ந்து கொண்ட, தீய சக்திகளை,

ஆர்.எஸ். எஸ் மற்றும் அதன் பரிவாரக் கும்பல்களை , அதிகார பீடத்தில் இருந்து அகற்ற வேண்டும். அவர்கள் அதிகாரத்தில் தொடர்வதால் ஏற்பட்டிருக்கும் பேரபாயத்தை மக்களிடம் எடுத்து சென்று, உணர்த்திடுவோம்.

நாட்டின் விடுதலைப் போரில் வீழ்ந்த மலர்களான ஈகியர்கள் பெயரில், கம்யூனிசம் தான் வர்க்க வேறுபாடுகள் இல்லாத, கொல்வாரும் இல்லாத, கொடுப்பாரும் இல்லாத "கிருதயுகம்" அமைய வாசல் திறக்கும் என்ற தீர்க்க தரிசனத்தோடு வாழ்ந்து காட்டிய கம்யூனிஸ்டுகளின் பெயரால் உறுதி ஏற்போம்.

**"புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட**
**போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்**
**பொதுஉடைமைக் கொள்கை திசை எட்டும் சேர்ப்போம்**
**புனிதமோடு அதை எங்கள் உயிர் என்று காப்போம்"**

என்ற பாவேந்தரின் வைர வரிகளுக்கு செயல்வடிவம் தருவதில் வெற்றி பெறுவோம்.

இடதுசாரி, ஜனநாயக, மதச்சார்பற்ற, தேசபக்த சக்திகளை, பரந்துபட்ட மக்கள் பேரணியை உருவாக்க உறுதி ஏற்போம்...

மீண்டும் சந்திப்போம்.

வாழ்த்துக்களுடன்:

**தோழமைமிக்க**

**இரா.முத்தரசன்**


# உத்தண்டியூர் ஊராட்சி

## பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம்

## ஈரோடு மாவட்டம்



### உத்தண்டியூர் ஊராட்சியில் வளர்ச்சித்திட்ட பணிகள் விபரம் (2021-22 நிதியாண்டு)

1. MGNREGS திட்டத்தில் நடைபெற்ற 66 பணிகளுக்கு செலவிடப்பட்ட தொகை ரூ.2,05,25,851/-
2. 15-வது நிதிக்குழு மானியம் - சாஸ்திரிநகர் காலனி, கீழ் எரங்காட்டூர், எரங்காட்டூர் ஓம்சக்திநகர், திருமூர்த்திநகர், ஒட்டரூர் ஆகிய பகுதிகளில் கான்கிரிட் தளம் மற்றும் வடிகால் பணி - ரூ. 21,18,000/-
3. உத்தண்டியூர் ஊராட்சியில் அக்கரைதத்தப்பள்ளி மற்றும் ஒட்டரூர் பகுதியில் வடிகிணறு சுத்திகரிப்பு இயந்திரம் பராமரிப்பு பணி - 2,20,00/-
4. உத்தண்டியூர் ஊராட்சியில் சாஸ்திரிநகர் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல் - ரூ.40.000/-



திருமதி. **ச.பூங்கொடி**
தலைவர்



திரு. **T.கிருஷ்ணசாமி**
துணைத் தலைவர்

### வார்டு உறுப்பினர்கள்

திருமதி. **ரங்குத்தாய்** (1 வது வார்டு)
திரு. **சிவகுருசாமி** (2 வது வார்டு)
திரு. **தனபால்** (3 வது வார்டு)
திருமதி. **சுசிலா** (5 வது வார்டு)
திருமதி. **வசந்தாமணி** (6 வது வார்டு)
திரு. **P.காளிமுத்து** (8 வது வார்டு)
திரு. **K.ரங்கசாமி** (9 வது வார்டு)
திருமதி. **K.சக்திமீனா** (10 வது வார்டு)
திரு. **K.சுமதி** (11 வது வார்டு)
திரு. **K.வடிவேலு** (12 வது வார்டு)

திரு. **S.அர்ஜீனன்** - ஊராட்சி செயலாளர்.

# வேலை பெறுவது சட்டப்பூர்வ உரிமை



நா.பெரியசாமி

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட, ஆரம்ப நாளில் இருந்தே அதன் மீது தாக்குதலும் தொடங்கி விட்டது. வேலை உறுதியளிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 17 ஆண்டுகள் ஆன பிறகும் அதன் மீதான தாக்குதல் குறையவில்லை, மாறாக அதிகரித்துள்ளன.**

வேலை உறுதியளிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட காலத்தில், எதிர்கட்சி வரிசையில் இருந்தவர்கள் இன்று ஆளும் தரப்பாக அமர்ந்துள்ளனர். ஆகையால், அவர்கள் அதிகாரத்தின் துணையோடு வேலை உறுதியளிப்புச் சட்டத்தை அழித்தொழிக்கும் வன்மத்துடன் செயல்பட்டு வருகிறார்கள்.

விவசாயத் தொழிலாளர்கள் உள்ளிட்ட கிராமப்புறத் தொழிலாளர்கள் அரை குறை வேலைவாய்ப்பு மட்டுமே பெற்று வருவதால், அவர்களது வாழ்க்கைப் படகு துயரக் கடலில் பயணித்து வருகிறது. வழிவழியாகத் தொடரும் வறுமை நிலைக்கு முடிவு காண ஆண்டு முழுவதும் வேலை வழங்க வேண்டும் என கோரி வருகின்றனர்.

சமூக வாழ்க்கை முறையில் திணிக்கப்பட்ட நால்வருண முறையும், சாதிய அடுக்குகளும் உழைக்கும் மக்களை உடல் உழைப்பு தவிர வேறு எந்த வாழ்வாதார வழியும் இல்லாத நிலைக்கு நெட்டித் தள்ளிவிட்டன. இதன் மூலம் வரம்பற்ற உழைப்புத் திருட்டு நடத்துவதை இயற்கை நியதி போல் நிலை நிறுத்தியுள்ளன.

தகவல் தொடர்புத் துறையில் வியக்கத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அறிவியல் 'தொழில்நுட்ப புரட்சி' மாயாஜால தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. ஆனாலும், சமூக அமைப்பில் உருவாக்கப்பட்ட பிளவுகள் நீடிக்கின்றன.

உடல் உழைப்பை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள விவசாயத் தொழிலாளர்களில் சரிபாதிக்கும் அதிகமானோர் "பட்டியலின சாதியினர்" என வகைப் படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் உழைப்புச் சுரண்டலுக்கு மட்டும் அல்ல, சமூக ஒடுக்குமுறைக்கும், அடக்குமுறைக்கும் ஆளாகி வருகிறார்கள்.

சமூகத்தின் எந்தப் பிரிவில் இருந்தாலும் பெண் தொழிலாளர்கள் உழைப்புச் சுரண்டல், சமூக ஒடுக்குமுறையோடு சேர்ந்து, ஆணாதிக்க அடிமைகளாகவும் வாழ வேண்டிய அவலம் தொடர்கிறது.

இந்த நிலையில்தான் விவசாயத் தொழிலாளர்களை நாடு முழுவதும் அணிதிரட்டி 1968 செப்டம்பர் 28, 29 தேதிகளில் மாநாடு நடத்தப்பட்டது. பஞ்சாப் மாநிலம், மோகா நகரில் நடந்த மாநாட்டில் இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம் (பாரதிய கேத் மஸ்தூர் சங்கம்) நிறுவப்பட்டது. இந்த அமைப்புதான் கிராமப்புறப் பாட்டாளிகளின் முதல் தொழிற்சங்க அமைப்பாகும்.

விவசாயத் தொழிலாளர் சங்க அமைப்பு மாநாடு, ஆண்டு முழுவதும் வேலை வழங்கும் திட்டங்களை ஒன்றிய, மாநில அரசுகள் உருவாக்க வேண்டும். வேலை பெறும் உரிமை சட்டப்பூர்வ உரிமையாக ஏற்கப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட பல தீர்மானங்களை நிறைவேற்றியது.

இதனைத் தொடர்ந்து வேலை பெறும் சட்டப்பூர்வ உரிமைக்கான கிளர்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஊர்வலம், ஆர்ப்பாட்டம், மறியல், வேலைநிறுத்தம் என போராட்டங்களும் தொடர்ந்தன. தெருக்களில் எழுப்பப்பட்ட கோரிக்கை முழக்கங்கள், நாடாளுமன்றத்திலும், சட்டப் பேரவைகளிலும் எதிரொலித்தன.

வேலை பெறும் உரிமைக்கான போராட்டம் 37 ஆண்டுகள் தொடர்ந்து நடந்ததன் விளைவாகவும், நாட்டின் அரசியல் நிகழ்வுப் போக்கில் இடதுசாரிக் கட்சிகள் தலையீடு செய்யும் வலிமை பெற்று விளங்கியது. 2005 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட வழி வகுத்தது.

கடந்த 2006 பிப்ரவரி மாதம் நடைமுறைக்கு வந்த மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் இன்று 15 கோடியே 50 லட்சம் தொழிலாளர்கள் குடும்பங்கள் வேலை பெறும் உரிமைக்கான வேலை அட்டை பெற்றுள்ளன.

நாடு முழுவதும் உள்ள 734 மாவட்டங்களில் 7 ஆயிரத்து, 154 ஒன்றியங்களிலும், இரண்டு லட்சத்து 70 ஆயிரத்து 325 கிராம ஊராட்சிகளிலும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ்நாட்டில் 37 மாவட்டங்களில் உள்ள 388 ஒன்றியங்களிலும், 12 ஆயிரத்து 525 சிற்றூராட்சிகளில் வாழ்ந்து வரும் ஒரு கோடியே 36 லட்சம் தொழிலாளர்கள் வேலை பெறும் உரிமை பெற்றுள்ளனர்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் வேலை அட்டை பெற்றுள்ள குடும்பங்கள் ஆண்டுக்கு நூறு நாள் வேலை பெற, சட்டப்பூர்வ உரிமை பெற்றுள்ளன. இந்த சட்டப்பூர்வ உரிமையை மதித்து நடக்க வேண்டிய ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் அதனை அலட்சியப்படுத்தியே வருகின்றன.

வேலை அட்டை பெற்ற குடும்பங்கள் வேலை கேட்டு விண்ணப்பித்த, 15 நாட்களுக்குள் அரசுத் தரப்பு வேலை கொடுக்க வேண்டும். தவறினால், வேலை மறுக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என வேலை உறுதியளிப்புச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

விவசாயத் தொழிலாளர்கள், கிராமப்புறத் தொழிலாளர்களிடம் போதிய விழிப்புணர்வும், சட்டம் குறித்த புரிதலும், தொழிற்சங்க செயல்பாடும் இல்லாததால், இழப்பீடு ஏட்டில் எழுதப்பட்ட எழுத்துக்களாகவே தொடர்கிறது

தமிழ்நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளில் வேலை அட்டை பெற்றுள்ள குடும்பங்கள் பெற்றுள்ள சராசரி வேலை நாட்கள் 2018–19, 48 நாள், 2019–20, 51 நாள், 2020–21, 50 நாள், 202122 நவம்பர் முடிய 39 நாட்கள் மட்டுமே வேலை வாய்ப்புப் பெற்றுள்ளன. அகில இந்திய சராசரி கணக்கும் இதனை தாண்டவில்லை.

> **விவசாய சாகுபடி முறைகளிலும், இதரத் தொழில் பிரிவுகளிலும் நவீன எந்திரங்கள் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. இதனால் மனித உழைப்பு நிராகரிக்கப்பட்டு. வேலையின்மை அதிகரித்து, சமூக கொந்தளிப்பு வெடிக்கும் நிலையை எட்டியுள்ளது.**

இந்தச் சூழலில்தான் இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கமும், தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கமும் ஆண்டுக்கு 200 நாட்கள் வேலை வழங்கவும், குறைந்தபட்ச ஊதியத்தை நாளொன்றுக்கு ரூ. 700/= ஆக வழங்கவும் கோரிக்கை வைத்து போராடி வருகின்றன.

கிராமப் பொருளாதாரம் நிலைகுலைந்து விட்டதை பற்றியோ, தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு மற்றும், கண்ணியமான வாழ்வுரிமை பறிக்கப்படுவது குறித்தோ பாஜக ஒன்றிய அரசு கொஞ்சமும் கவலைப்படவில்லை.

அது அதானி, அம்பானி போன்ற பன்னாட்டு கார்ப்ரேட் குழும நிறுவனங்களின் லாப வேட்டைக்கு துணையாக மட்டுமே செயல்படுகிறது. ஜி20 நாடுகளில் தலைமை கிடைத்து விட்டதாக ஒன்றிய அரசு பெருமை பீற்றி வருகிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதியை ஆண்டுக்கு ஆண்டு குறைத்து வருகிறது. 2020 21 ஆம் ஆண்டில் 61 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கியது.

அந்த ஆண்டு கொரோனா நோய்த்தொற்று காரணமாக நாடு முடக்கம், தடையுத்தரவுகள் என்ற கடுமையான நடவடிக்கைகளால் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் அவரவர் தாய் கிராமங்களுக்கு திரும்பிய போது, அவர்களது உயிர் வாழ்வுக்கு உதவியது வேலை உறுதியளிப்புத் திட்டப் பணிகள் மட்டும்தான்.

இந்த காலகட்டத்தில் சமூக நலனின் அக்கறை கொண்ட பொருளாதார வல்லுநர்கள், பொதுவாழ்வுப் பிரமுகர்கள், சர்வதேச புகழ் பெற்ற அறிஞர்கள், விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் எனக் குரல் கொடுத்ததால் வேலை உறுதியளிப்புத் திட்டப் பணிகளுக்கு ஒரு லட்சத்து, 11 ஆயிரத்து 500 கோடி ரூபாய் ஒன்றிய அரசு செலவிட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது

ஆனால், "பழைய குருடி, கதவை திறடி" என்ற கதையாக ஒன்றிய அரசு, வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கான நிதியை மீண்டும் 98 ஆயிரம் கோடி ரூபாயாகக் குறைந்து விட்டது.

மோடியின் ஒன்றிய அரசு நிதியை குறைத்து திட்டத்தை சீர்குலைப்பதுடன் நிற்கவில்லை. அண்மையில் ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சித் துறையின் முன்னாள் செயலாளர் அமர்ஜித் சின்கா தலைமையில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தை அழித்தொழிக்கும் நோக்கத்துடன் உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக் குழு உறுப்பினர்கள் வேலை உறுதியளிப்புத் திட்டத்தை வளர்ச்சி பெற்ற தமிழ்நாடு, கேரளா போன்ற மாநிலங்களில் செயல்படுத்தத் தேவையில்லை எனப் பேசி வருகின்றனர்.

சில நாட்களுக்கு முன்னர் பிரதமர் மோடியும், வளர்ச்சியடைந்த மாநிலங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தை ஒன்றிய அரசு செயல்படுத்தாது என்று கூறத் தொடங்கியுள்ளார்.

ஐம்பது ஆண்டுகளாக போராடிப் பெற்ற, வேலை பெறும் சட்டப்பூர்வ உரிமையை பறிக்கும் வஞ்சக வேலைகளில் மோடியின் ஒன்றிய அரசு ஈடுபட்டு வருகிறது.

நான்கு வருணக் கோட்பாடுகளையும், சாதிய அடுக்குமுறையினையும் நவீன வடிவத்தில் கட்டமைப்பதில் தீவிரம் காட்டி வருகிறது.

இனியும் பொறுத்து போவதில் பயனில்லை. கிராமப்புறப் பாட்டாளிகள் ஓரணி திரள்வோம். நம் வாழ்வில் கடைபிடிக்கும் சமய வழிகள், நம்பிக்கையோடு வழிபடும் முறைகள், சமூக புல்லுருவிகளால் திணிக்கப்பட்ட சாதி அடையாளங்கள் வேறுபட்டிருக்கலாம். ஆனால், வசிப்பிடம் இல்லை, மனைநிலம் இல்லை, வேலை இல்லை, வருமானத்திற்கு வழியில்லை, கண்ணியமான வாழ்வும் இல்லை, வயது முதிர்ந்த காலத்தில் சுயமரியாதையோடு வாழ ஒய்வூதியம் இல்லை, ஏன்? செத்த பிறகு பிணத்தை புதைக்க மயான நிலமும் இல்லை.

எனவே, நம்மைச் சூழ்ந்து நிற்கும் இல்லாமையை வெல்ல வேண்டும் என்பதில் ஒன்றுபட்டு ஓரணி திரள்வோம். ஆண்டு முழுவதும் வேலை பெறும் சட்டப்பூர்வ உரிமையை வென்றெடுத்து, கண்ணியமும், சுயமரியாதையும் கொண்ட வாழ்வுரிமை பெறுவோம்...



தொடர்புக்கு: 9443118544

# புரட்சிக்கு வித்திட்ட இலக்கியங்கள்!



மு.வீரபாண்டியன்

**வரலாறு தனது நீண்ட நெடிய பயணத்தில் மகத்தான இலக்கியங்களையும் சுமந்தபடி தான் பயணிக்கிறது. அதில் விடுதலை இலக்கியங்கள் தனித்துவம் மிக்கவை. உலக விடுதலை இயக்கங்களுக்கு விடுதலை இலக்கியங்களின் பங்களிப்பு பிரமிப்பூட்டுபவை. உலக இலக்கியம் எனும் இச்சொல்லை உலகிற்கு அளித்தது ஜெர்மானிய கவிஞன் கதே என்கிறார்கள் வரலாற்று ஆய்வாளர்கள்.**

அதேபோல மனித உரிமைகள் குறித்த எழுத்துக்களை, பிரகடனங்களை உலகிற்கு அளித்தது கவிஞன் ஷெல்லி என்கிறார்கள்.

1816 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் மான்செஸ்டர் நகரில் தொழிலாளர்கள் மீது பெரும் அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் கொல்லப்பட்டார்கள்.

தொழிலாளர்கள் மீது நடத்தப்பட்ட இரக்கமற்ற முதல் படுகொலை இது என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இதனை நேரில் பார்த்து, அதிர்ச்சி அடைந்து இத்தகைய அநீதிக்கு எதிராக ஷெல்லி தீட்டிய உலகப் புகழ்வாய்ந்த காவியம் தான் “அராஜகத்தின் முகமூடி” (Mask of Anarchy)

**விதைப்பது நாம்!**
**அறுப்பது எவனோ!?**
**ஆயுதங்களை**
**நாம்தாம் வார்ப்பிக்கிறோம்!**
**எனவோ ஏந்துகிறான்!**
**இதற்கொரு முடிவு வேண்டும்!**

என 1816 இல் கவிதை வடித்தான் ஷெல்லி. மனித உரிமை குறித்த பிரகடனங்கள் புவியில் தெறித்தன. மான்செஸ்டர் நகரம் மனித உரிமைக்காக கொந்தளித்தது.


இன்று ஐ.நா. மனித உரிமையின் மூலம் ஷெல்லியின் பிரகடனங்கள்தான் மனித உரிமை பிரகடனங்கள் என வெளியிட்டு ஷெல்லியை நினைவு கூர்ந்தது குறிப்பிடத்தக்கது.


அதுபோல் அமெரிக்க கருப்பின மக்களின் வரலாற்றில் அடிமை முறைக்கு எதிராக முதல் நூல். டாம் மாமாவின் குரல் (uncle tom's cabin) ஆபிரகாம் லிங்கனுக்கு அடிமை முறைக்கு எதிராக சிந்திக்கும் முதல் உணர்வை தூண்டிய நூல் இது என அவரே குறிப்பிடுகிறார்.

ஹேரியட் பீச்சர் எனும் அமெரிக்க பெண்மணி எழுதிய புத்தகம் இது.

1852 ஆம் ஆண்டு கருப்பின மக்கள் மனிதர்கள் அல்ல – அவர்கள் கடைச் சரக்கு தான்– அவர்களை வாங்கலாம், விற்கலாம் என டிரஸ்ட்காட் வழக்கில் நீதிமன்றம் அளித்த அதிர்ச்சி தீர்ப்பு இது.

சந்தை கூடினால் ஏற்படும் சத்தம் அனைவரும் அறிந்தது தான். ஆனால் மனிதர்களை விற்கும் சந்தையில், தாய், மகனை பிரியும் போது, கணவன், மனைவியை பிரியும்போது, அந்தப் பிரிவினை தாங்காமல் எழும் கதறல், அலறல், சவுக்கடியால் தேம்பும் நிலை என சந்தை முழுவதும் சோகத்தில் ததும்பும். இதை புத்தகத்தில் வடித்தார் ஹேரியட்.




அமெரிக்க கருப்பின வரலாற்றில் ஏற்பட்ட துயரங்கள், புவியில் எங்கும் நிகழ்ந்ததில்லை. தன் கரங்களை பிணைத்துள்ள சங்கிலிதான் தனது ஆயுதம் என்பதனை கருப்பின மக்களை உணரச் செய்ய இந்நூல் கடும் முயற்சிகளை மேற்கொண்டது.

இந்நூலுக்கு பின் தான் பிரடெரிக் டக்லஸ் போன்ற கருப்பின தலைவர்கள் அழித்தொழிப்பு இயக்கத்தை துவக்கினார்கள். அடித்தொழிப்பது மனித உயிர்களை அல்ல. வெள்ளையர் உடமைகளை.

உலக இலக்கியங்களில் மகத்தான மற்றொரு நூல் ஏழை படும் பாடு (Les Misérables) வரலாறு என்னை விடுதலை செய்யும் என நீதிமன்றத்தில் முழங்கும் முன் தோழர் பிடல் சிறையில் படித்த புத்தகம் இது. முதல் விடுதலை உணர்வை, எனக்குள் தோற்றுவித்தது ‘ஏழை படும் பாடு’ என்னும் இந்நூல்தான் என கோசிமின் குறிப்பிடுகிறார்.

மார்க்சிம் கார்கியின் ‘தாய் நாவல்’, இப்புதினம் அக்டோபர் புரட்சிக்கு மட்டுமல்ல, உலகப் புரட்சிக்கும் உந்துவிசை இலக்கியமானது.

பாவல் உட்பட ஒவ்வொரு கதாபாத்திரமும் ரஷ்ய மறுமலர்ச்சிக்கானது. பாவல் ஒரு முன்னுதாரண தோழர். அவரது சகாக்கள் அர்ப்பண குணம் கொண்டவர்கள். மரணத்தின் பிடியில் நின்றபோதும் புரட்சியை நேசித்தவர்கள். தாய் புரட்சியின் பொருட்டு பிள்ளையை




அவனது தோழர்களை உச்சி முகர்ந்தவள்.

டால்ஸ்டாய், தஸ்தோவஸ்கி, ஆண்டன் செகோப் போன்றவர்கள், மறுக்கவியலாத மகத்தான எழுத்தாளர்கள் என்றாலும் கார்கிக்கு பின் தான் புரட்சிக்கான உலகம் ரஷ்யாவை தேடியது.

தோழர் லெனின் தாய் நாவலை நேசித்தார். எனினும் அவருக்கு 26 பேரும், இளம்நங்கையும் என்ற கார்கியின் நூல்தான் மிகப் பிடித்தது என்றார்கள் லெனினின் நெருங்கிய தோழர்கள். குரூப்ஸ் கயாவும் இதனையே குறிப்பிடுகிறார்.

பசியால், பட்டினியால், நோய் நொடியினால் வாழ்ந்தாலும், தொழிலாளர் குணம் ‘அர்ப்பணம்’ தான் என்கிறது கார்கியின் நாவல்கள்.

கடையனுக்கும் கடை தேற்றம் (unto the last) இந்த நூலினை ரோபன் சிறைத்தீவில் தோழர் மண்டேலா படித்தது.

இதற்கும் முன் காந்தி பலமுறை இதனை படித்தார்.

தோழர் பிடல், சாவேஸ் மற்றும் மேற்குலக நாடுகளின் எழுத்தாளர்களை சந்திக்கும் போதெல்லாம் இந்த நூலினை மேற்கோள் காட்டுவாராம்.

“ஒரு மனிதன் தோற்றப் பொலிவில் அல்ல, உடைமைகளால் அல்ல, படித்த படிப்புகளால் அல்ல, எத்தகைய மனிதர்களுக்கு அருகில் இருக்கின்றான்” என்பதுதான்.

வாழ்வின் கடைக்கோடி மனிதர்கள் புறக்கணிக்கப்பட்டவர்கள்– நிறங்களால் வெறுக்கப்பட்டவர்கள், புலம்பெயர் மக்கள் விடுதலை வேண்டுவோர் என வரலாறு படைக்கும் எளிய மக்கள் அருகில் கியூபா இருக்கிறது.

unto the last அதாவது கடையனுக்கும் கடையனாய். நான் மேற்கத்திய படைப்பாளிகளைப் பார்த்துக் கேட்கிறேன்.

அமெரிக்கா எங்கே இருக்கிறது? ஒரு நூற்றாண்டு முழுவதும் கொள்ளையடிக்கப்பட்ட தேசங்கள், ஆப்பிரிக்க தேசங்கள்.

“நீங்கள் புவியின் செல்வங்கள் முழுவதையும் அபகரித்துக் கொண்ட நாடுகள். அருகில் நீங்கள் இருப்பது அறிவின் தடை அல்லவா?” என பிடல் கேட்டாராம்!

இந்த அடிப்படையில் புரட்சிக்கு வித்திடும் இலக்கியங்கள் மேலும் தொடர வேண்டும்.

## இந்தியாவின் முக்கிய நிகழ்வுகள்

1853 ஏப்ரல் 15 தானே – பம்பாய் இடையே இந்தியாவின் முதல் ரயில் ஓட்டம்

1856 ஜூலை 26 விதவைத் திருமணச் சட்டம் இயற்றப்பட்டது.

1879 மார்ச் 2 இந்தியாவின் முதல் பெண்கள் கல்லூரி கல்கத்தாவில் துவக்கம்

1918 ஏப்ரல் 27 இந்தியாவின் முதல் தொழிற்சங்கம் எம்.எல்.யூ. துவக்கம்

1919 மார்ச் 18 ரவுலட் சட்டம் அமலானது

1919 ஏப்ரல் 13 ஜாலியன் வாலாபாக் படுகொலை

1920 அக்டோபர் 31 ஏஐடியூசி அமைப்பு தினம்

1923 அக்டோபர் 30 லாலா லஜபதிராய் மீது லாகூரில் காவல்துறை தடியடி

1925 டிசம்பர் 26 இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி துவக்கம்

1928 பிப்ரவரி 3 “சைமனே திரும்பிப் போ” வேலை நிறுத்தம்

1930 மார்ச் 12 மகாத்மா காந்தி தண்டி யாத்திரை தொடங்கினார்

1930 ஏப்ரல் 18 சிட்டகாங் ஆயுதப் புரட்சி

1936 ஜனவரி 15 அகில இந்திய விவசாயிகள் சங்கம் துவக்கம்

1936 ஜூலை 30 புதுச்சேரி தியாகிகள் தினம்

1940 மார்ச் 5 பஞ்சப்படி கோரி பம்பாய் பஞ்சாலைத் தொழிலா ளர்கள் வேலை நிறுத்தம்

1943 மார்ச் 29 கையூர் தியாகிகள் தூக்கிலிடப்பட்ட தினம்

1943 மே 23 இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் மாநாடு பம்பாயில் நடைபெற்றது

1946 பிப்ரவரி 18 பம்பாய் கடற்படை புரட்சி துவக்கம்

1946 ஜூலை 4 தெலுங்கானா ஆயுதப்புரட்சி துவங்கியது

1947 ஆகஸ்ட் 15 இந்திய விடுதலை தினம்

1947 ஆகஸ்ட் 29 அம்பேத்கர் தலைமையில் அரசியல் சாசன வரைவுக்குழு அமைப்பு

1948 அக்டோபர் 22 புன்னப்புரா வயலார் கிளர்ச்சி துவங்கியது

1950 ஜனவரி 26 இந்திய குடியரசு தினம்

1952 ஜூன் 2 தீண்டாமை தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டது

1954 நவ. 1 பிரெஞ்ச் ஆதிக்கத்திலிருந்து புதுச்சேரி விடுதலை

1957 ஏப். 5 தேர்தல்மூலம் கேரளாவில் முதல் கம்யூ. ஆட்சி

1959 ஜூலை 31 கேரள கம்யூனிஸ்ட் ஆட்சியை ஒன்றிய அரசு கலைத்தது

1962 மார்ச் 14 கோவா விடுதலை பெற்ற நாள்

1965 செப்டம்பர் 19 இந்திய பாகிஸ்தான் போர் துவங்கியது

1969 ஜூலை 19 இந்திய அரசு 14 வங்கிகளை தேசவுடைமையாக்கியது

1971 டிசம்பர் 16 வங்கதேசப் போரில் பாகிஸ்தான் சரணடைந்தது

1982 ஜனவரி 19 விடுதலைக்குப் பின் முதல் அகில இந்திய பொது வேலை நிறுத்தம்

1992 டிசம்பர் 6 மதவெறியர்களால் பாபர் மசூதி இடிக்கப்பட்ட தினம்

1997 ஜூலை 25ல் இந்தியாவின் குடியரசுத் தலைவராக முதன் முதலில் தலித் சமூகத்தை சர்ந்த கே.ஆர்.நாராயணன் பொறுப்பேற்றார்.



- த.லெனின்

**தோன்றின் புரட்சியோடு தோன்றுக! என்ற புது மொழியோடு 1925 டிசம்பர் 26 ஆம் தேதி பிறந்தது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி! விடுதலைக் கெட்டு பாழ்பட்டு நின்ற நேரத்தில் வீறு கொண்டு எழுந்தது! ரத்தம் சிந்தி உயிர் நீத்த தியாக வேள்வியில் பிறந்தது! அந்நிய அடிமைத்தளை அறுக்க போர்க் கோலம் பூண்டது! விடுதலைப் போராட்டம் மூண்டது!**

# இந்திய விடுதலைக்கு சுட்டுவிரலைக்கூட நீட்டாதவர்கள்!



ஆகாவென்று எழுந்த சோவியத் புரட்சி காலனி ஆதிக்க நாடுகளில் தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு உத்வேகம் அளித்தது. மாமேதை லெனின் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்க மாநாட்டில் காலனி ஆதிக்க நாடுகளில் உள்ள, கம்யூனிஸ்ட் கட்சிகள் அந்தந்த நாடுகளின் விடுதலைப் போராட்டத்தில் மற்றவர்களோடு அணி சேர்ந்து போராட வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்தார்.

அதன் பின்புதான் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு கம்யூனிஸ்ட் பயம் தோற்றிற்று!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரில் அக்டோபர் 17, 1920 இல் சோவியத் தாஷ்கண்ட் நகரில் உருவாக்கப்பட்டது. ஆனாலும், ஒன்றுபட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வெளிநாட்டில் தோன்றிய அதனை ஏற்கவில்லை. 1925 இல் கான்பூரில் நடைபெற்ற முதல் மாநாட்டு நிகழ்வைத்தான் கட்சியின் துவக்கமாக அங்கீகரித்தது.

1920 க்குப் பிறகு வெளிநாடுகளில் இருந்து அதிலும் குறிப்பாக பிரிட்டிஷ் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து நிறைய கம்யூனிஸ்டுகள் குழுக்களாக இந்தியா நோக்கி வர ஆரம்பித்தனர். பிரிட்டிஷ் உளவுத்துறையினுடைய ஆவணங்களைப் பார்க்கும் போது, இந்தியாவில் கம்யூனிஸ்டுகள் ஊடுருவக் கூடும் என்று உணர்ந்துதான், 1920 இல் அன்றைய பிரிட்டிஷ் பாஸ்போர்ட் சட்டத்தை கொண்டு வந்தது. அவர்களது முதன்மையான நோக்கமே வெளிநாடுகளில் இருந்து வரும் கம்யூனிஸ்டுகளை சோதிக்க வேண்டும் என்பதாகத்தான் இருந்தது.

அதனை ஒட்டி நமது கடல் வழியாக வெளிநாடுகளிலிருந்து கம்யூனிசத்தை பரப்புவதற்கான பல்வேறு பிரசுரங்கள் வருகை தருவதை உணர்ந்து பதறிப் போன இந்திய கடலாடிகளின் அமைப்பு, அதனை தடுக்கும் முயற்சியாக, குறிப்பாக கம்யூனிஸ்ட் நூல்களை தடை செய்வதற்கு கடல் சுங்க சட்டத்தை 1932 ஆம் ஆண்டு கொண்டு வந்தது!

இந்த கம்யூனிச அபாயத்தை தடுக்கும் பொருட்டுதான் பெஷாவர் சதி வழக்கை 1921–23 ஆம் ஆண்டு வரை போட்டது. முகமது அக்பர் கான் என்கிற 26 வயது இளைஞர், அவர் சோவியத் செம்படையில் பணியாற்றி இந்தியாவிற்கு வருகை தந்தவர். அவருக்கு ஏழாண்டு கடுங்காவல் சிறைத் தண்டனையை அளித்தது பிரிட்டிஷ் அரசு!

1921 ஆம் ஆண்டு நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் அகமதாபாத் மகா சபையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை முழுவதுமாக படிக்கப்பட்டது. மௌலானா ஹசரத் மொகானி, சுவாமி குமாரனானந்தா ஆகியோர் பூரண விடுதலை என்பது குறித்த தீர்மானத்தை கொண்டு வந்தனர். இதனை காந்தி ஏற்க மறுத்தார்.

ஆனால் அதற்குப் பிறகு எட்டு ஆண்டுகள் கழித்து 1929 ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு தலைமை தாங்கிய லாகூர் காங்கிரஸ் மகாசபை அதனை ஏற்றுக் கொண்டது.

முதல் உலகப்போருக்கு பின்பு எழுந்த எழுச்சிகளின் வழியே ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு எழுந்தது. சிந்தனை சிற்பி சிங்காரவேலர் 1918 ஆம் ஆண்டு மெட்ராஸ் லேபர் யூனியன் என்ற அமைப்பை உருவாக்கினார்.

பின்பு 1923 ஆம் ஆண்டு மே தினத்தை இந்தியாவிலேயே முதன் முதலில் கொண்டாடிய வரும் அவரே! அவர்தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் அமைப்பு மாநாட்டின் தலைவர். அந்த மாநாட்டில் தலைமை உரையாற்றியவரும் அவரே.

**முசாபர் அஹமது கல்கத்தாவிலும், பம்பாயில் டாங்கேவும், லாகூரில் குலாம் ஹுசைனும் தொழிலாளி வர்க்கத்தை அமைப்பாக்கி திரட்டும் முயற்சிகளை மிகப் பெரிய அளவிற்கு மேற்கொண்டனர். இவை அனைத்தும் கான்பூர் சதி வழக்கு வரும்வரை நீடித்தது.**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 1925 இல் பிறக்கும்போதே பூரண விடுதலை என்பதை தன்னுடைய இலக்காக அறிவித்தது.

வகுப்புவாத இயக்கங்களைச் சார்ந்தவர்களை அமைப்பில் சேர்க்கக்கூடாது என்று தடை விதித்தது. இப்படிப்பட்ட தடை விதித்த முதல் அரசியல் கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி!

மீரத் சதி வழக்கைத் தொடர்ந்து கட்சி தடை செய்யப்பட்டதால், இந்திய அளவில் தொழிலாளர் மற்றும் விவசாய கட்சி என்ற பெயரில் 1928 இல் கம்யூனிஸ்டுகள் செயல்பட்டனர். அதன் முதல் முழக்கம் பொருளாதார, சமூக ஏற்றத்தாழ்வுகளை அறுப்பதன் மூலம் பூரண விடுதலை என்பதை முழக்கமாக வைத்தனர்.

அதன் பின்பு 1929 ஆம் ஆண்டு நடந்த காங்கிரஸ் மாநாட்டின் திடலுக்கு திரளாக சென்ற தொழிலாளர் விவசாயக் கட்சியினர் பூரண சுதந்திரம் வேண்டும் என்று இரண்டு மணி நேரம் அந்த காங்கிரஸ் மாநாட்டு பந்தலில் முற்றுகையிட்டு முழக்கம் எழுப்பினர்.

அதன் பின்பு தான் காங்கிரஸ் கட்சி ‘‘பூரண விடுதலை’’ என்பதை ஏற்றுக் கொண்டது! பின்பு ஜவகர்லால் நேரு தலைமை தாங்கி நடத்திய சோசியலிஸ்ட் இளைஞர் காங்கிரசின் கூட்டத்தில் நாட்டின் ஒரே வழி கம்யூனிசம்தான்! என்பதை அவர் பிரகடனப்படுத்தினார்.

இப்படிப்பட்ட புரட்சிகர கம்யூனிஸ்ட் நடவடிக்கைகளை கட்டுப்படுத்ததான் பிரிட்டிஷ் அரசாங்கம் பொது பாதுகாப்பு சட்டம், தொழில் தகராறு சட்டம் என்ற புதிய சட்டங்களைக் கொண்டு வந்தது.

இதனை எதிர்த்து தான் மாவீரன் பகத்சிங்கும், பட்டுகேஷ்வர் தாத்தாவும், மத்திய சட்டமன்ற மைய மண்டபத்தில் கேளாத காதுகள் உரக்க கேட்கட்டும் என்று குண்டுகளை வீசி கைதானவர்கள் என்பது வரலாறு!

இப்படி விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெரும் பாய்ச்சலென வளர்ந்த கம்யூனிஸ்ட் இயக்கம் 1929 இல் மீண்டும் மீரட் சதி வழக்கின் மூலம் முடக்க முயற்சித்தனர். இதில் 32 பேர் குற்றம் சாட்டப்பட்டனர். அதில் ஆங்கிலேய கம்யூனிஸ்டுகளான பிலிப்ஸ் பிராட், பென் பிராட்லி மற்றும் ஹெச்.எல்.ஹட்சின்சன் ஆகிய மூவரும் இந்திய சிறைகளில் வாடினர். பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகள் இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு பாடுபடுகிற ஒரு பெரிய கம்யூனிஸ்ட் இயக்கத்தை இந்தியாவில் கட்டுவதற்கு முயற்சித்தவர்கள் ஆவர்.

இவர்களில் பிலிப்ஸ் பிராட்டிற்கு டாக்டர் அம்பேத்கர் கட்டணமின்றி வழக்கு நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களோடு சவுக்கத் உஸ்மானி என்ற ஆரம்ப கால இந்திய கம்யூனிஸ்ட் சிறையில் அடைக்கப்பட்டார். இவரைத்தான் 1929ல் நடைபெற்ற இங்கிலாந்து நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்பென் வேலி தொகுதியில், சைமன் கமிஷனுக்கு தலைமை தாங்கிய ஜான் சைமனை எதிர்த்து அங்கு நிறுத்தியது. இந்தத் தேர்தலில் அவர் தோல்வியுற்றாலும் அதற்குப் பின்பு 1931 இல் நடந்த பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தேர்தலில் செயின்ட் பாங் கிராஸ் தொகுதியில் அவரை நிற்க வைத்து மாபெரும் வெற்றி பெற வைத்தது!

வரலாறு இப்படி இருக்க ‘‘அந்நிய சரக்கு கம்யூனிசம்‘‘ என்று சொல்லக்கூடியவர்கள் நம் நினைவில் வருகிறார்கள்! நம்முடைய கேள்வி, இந்திய விடுதலைப் போராட்டத்தில் பல ஆண்டுகாலம் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சிறைகளில் வாடி வதங்கிய கம்யூனிஸ்ட்கள், எதற்காக துன்பப்பட்டார்கள்? அவர்களுடைய முழு நோக்கம் என்பது எப்படிப்பட்டதாக இருந்தது? என்பதை சிந்திக்க வேண்டும்!

தேசபக்தியில் தங்களுக்கு நிகர் யாருமில்லை என்ற இறுமாப்போடு பேசி வரும் ஆர்.எஸ்.எஸ். சும் 1925 ல்தான் ஹெட்கேவரால் விஜய தசமி அன்று தொடங்கப்பட்டது. ஆனால், அன்று கொழுந்து விட்டு எரிந்த விடுதலைப் போராட்டத்தில் எந்த பங்கு பணியும் ஆற்றாத அமைப்பாக ஆர்.எஸ்.எஸ். உள்ளது.

இதன் குறிக்கோள் வேதகால ஆரியப் பெருமையை நிலைநாட்டுவது ஆகும்.

ஆர்.எஸ்.எஸ். ஓர் இந்து அமைப்பு மட்டுமே.தான் ஒரு பிரிட்டிஷ் எதிர்ப்பு இயக்கம் அல்ல என்பதை பிரகடனப்படுத்தியது. இந்தியா சோசியலிசத்தை நோக்கி செல்வதை தடுக்கவே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது என்றும், கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்கள் எதிரிகள், கம்யூனிஸ்டுகளை பயங்கரவாதிகள் என்றது!

விடுதலைப் போராட்ட தியாகிகளைப் பற்றி ஆர்.எஸ்.எஸ். வரையறுத்த போது ‘‘இந்த மனிதர்கள் பின்பற்ற தக்கவர்களாக நமது சமுதாயத்தால் பார்க்கப்படவில்லை’’ என்று குறிப்பிட்டது. மனுஷ்மிருதியின் விதிகள் உலகத்தாருக்கு ஆர்வத்தை தூண்டிக் கொண்டிருக்கிறது. இயல்பான, அடக்க ஒடுக்கமான (சாதி) சமூகத்தை அது படைத்தது. ஆனால் நமது அரசியல் சாசன சட்டத்தில் அதற்கு எந்த இடமும் இல்லை என்று ஒதுக்கிவிட்டது. இதன் மூலம் மனுஸ்ருதியை உயர்த்திப்பிடித்தது ஆர்.எஸ்.எஸ்.

இந்து மதம், இந்து மொழி (சமஸ்கிருதம்), இந்து கலாச்சாரம், இந்து நாடு, இந்து ராஷ்ட்ரா என்பதே அதன் இலக்கு. நமது அரசியல் சாசனம் குறிப்பிட்ட இந்தியா ஒரு சமயச் சார்பற்ற, ஜனநாயக, சமதர்ம நாடு என்பதை அவர்கள் ஏற்பதில்லை.

மொழி வழி மாநிலம் அமைக்க போராட்டம் நடைபெற்றபோது, கம்யூனிஸ்ட்கள் அதற்காக மிகப் பெரும் பங்குபணி ஆற்றினர். ஆனால் ஆர்.எஸ். எஸ். மொழிவழி மாநிலம் அமைத்தால் இந்தியா சிதறுண்டு போகும் என்று கூறி அதை நிராகரித்தது.

சோவியத் எதிர்ப்பு, அமெரிக்க ஆதரவு, ஹிட்லரின் ஜெர்மனிக்கும், பாசிச முசோலினியின் இத்தாலிக்கும் ஆதரவு தரும் நிலைபாட்டை தொடர்ந்து எடுத்த அமைப்புதான் ஆர்எஸ்எஸ்.

கலாச்சார தேசியத்திற்கு பாசிசம் காட்டும் வழியே மேலானது; உயர்வானது. இந்து இந்தியாவின் வளர்ச்சிக்கும் ஏற்றது, மறுமலர்ச்சிக்கும் தெளிவான வழிமுறை கோட்பாடுகளை இது காட்டுகிறது என்றார் ஆர்எஸ்எஸ் சின் மூலவர்களில் ஒருவரான டாக்டர் பி.எஸ்.மூஞ்சே.

இப்படி விடுதலைப் போராட்டத்தில் ஒரு பிற்போக்கான ஏகாதிபத்திய பிரிட்டிஷ் ஆதரவு நிலைப்பாட்டை எடுத்த ஆர்எஸ்எஸ் தான் இன்று அதன் அரசியல் பிரிவான பாஜக மூலம் நாட்டை ஆள்கிறது.

எனவே, காலனி ஆதிக்ககால அந்தக் கொடுமை நிறைந்த மக்கள் விரோத பொருளாதாரக் கொள்கைகளைத்தான் மீண்டும் உலகமயம், தனியார்மயம், தாராளமயம் என்ற நவகாலனிய ஆதிக்க முறையாக இன்று அமல்படுத்தப்படுகிறது.

ஆக, வெள்ளை ஏகாதிபத்தியத்தின் சுரண்டல் ஆட்சிக்கும், இந்துத்துவத்தின் பெயரால் அரசாளும் மோடியின் ஆட்சிக்கும் என்ன வித்தியாசம்?

நாட்டின் 75 ஆவது விடுதலை அமிர்த விழாவை இன்று அவர்கள் கொண்டாடுகிறார்களாம்! நாட்டின் விடுதலைக்கு சுட்டு விரலைக் கூட நீட்டாத இவர்கள் இன்று தேச பக்தர்களாம்!

அரசை எதிர்த்து கேள்வி கேட்டால் தேசத் துரோகிகளாம்! ஆம் பிரிட்டிஷ்காரர்களால் தேசத்துரோகிகள் என்று அழைக்கப்பட்டவர்கள் தான், விடுதலைக்கான சர்வபரி தியாகம் புரிந்த தேசபக்தர்கள்! அந்த வழியில் இவர்கள் கூறுவதும் சரிதானே!

தொடர்புக்கு: 94444 81703



எம்.ரவி

**எதிர்காலத்தில் மனித குலம் மாண்புடன், இன்பத்துடன் வாழ வேண்டும் என்பதற்காக தங்கள் இன்னுயிரையும் தியாகம் செய்தவர்கள் கம்யூனிஸ்டுகள். நாளை உருவாகும் புதிய சமுதாயத்தைக் காண்பதற்கான வாய்ப்பு இல்லாமல் போகும் என்பதை தெரிந்தும் அந்த புதிய சமுதாயத்தை "சோசலிச சமுதாயத்தை" படைப்பதற்காக தங்கள் வாழ்க்கையை தியாகம் செய்தவர்கள், தியாகம் செய்பவர்கள் கம்யூனிஸ்டுகள்.**

# கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் 98வது அமைப்பு தினத்தில் உறுதியேற்கிறோம்!



ஆம், கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் தனி வார்ப்புகள், தனித் தாதுக்களால் உருவாக்கப்பட்டவர்கள். உலகப்பாட்டாளி வர்க்கப்படையின் நிகரற்ற போர் தளபதி தோழர் மாமேதை லெனின் அவர்களின் அணியில் அணிவகுத்து நிற்பவர்கள்.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் மனித வாழ்க்கையை நேசிக்கின்றோம். ஆம், ஒவ்வொரு மனிதனும் மகிழ்ச்சியும், அமைதியும், சுதந்திரமும் கொண்ட நிறைவான வாழ்க்கையை வாழ வேண்டும் என்று விரும்புகிறோம். அந்த இலட்சியம் நிறைவேறுவதற்கான பாதையை அமைக்கும்போது குறுக்கிடும் இடையூறுகளை, தங்கு தடைகளை தகர்த்தெறிவதற்கு எங்கள் உயிரையும் தியாகம் செய்ய கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் ஒவ்வொரு மனிதரையும் நேசிக்கின்றோம். எனவே ஆதிக்கம், அடக்குமுறை, ஒடுக்குமுறை, சுரண்டல் ஆகியவை எந்த வடிவத்தில், எந்த மனிதனின் மீதும் ஏவுவதை எதிர்க்கின்றோம். மனிதனை மனிதன் சுரண்டம் கொடுமையை, மனிதனின் உழைப்பை சுரண்டுவதற்காக நிகழ்த்தப்படும் ஆதிக்கத்தை, ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காக செய்யப்படும் அடக்குமுறைகளை, ஒடுக்குமுறைகளை சமரசமின்றி எதிர்த்து போராடுகிறோம்.

அந்தப் போராட்டத்தில் எங்கள் உயிரையும் தியாகம் செய்ய கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் மனிதத் தன்மையை நேசிக்கின்றோம். எனவே, இலாபம் மேலும் இலாபம் என்ற பேராசை பிடித்த நிதி மூலதன முதலாளித்துவத்தை எதிர்க்கின்றோம். இந்த கேடுகெட்ட முதலாளித்துவ அமைப்பு பண உறவையை அடிப்படையாகக் கொண்ட அமைப்பாகும்.

மனிதனைக் காட்டிலும் பணத்திற்கே அதிக மதிப்பைத் தருகிற மிக மோசமான அமைப்பாகும். இந்த அமைப்பு இலாப வெறிகொண்டு மனித தன்மையையே அழிக்கிறது. ஆகவே, மனிதத் தன்மையை பறித்து அழிக்கின்ற தீய சக்திகளை வீழ்த்த கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் எந்த தியாகமும் செய்ய தயாராக இருக்கின்றோம்.

கம்யூனிஸ்டுகளாகியநாங்கள்பரிபூரண விடுதலையை விரும்புகின்றோம். ஆகவே, உண்மையான விடுதலையை, மனிதகுலம் முழுவதும் பெறுகிற விடுதலையை உருவாக்க நினைக்கின்றோம்.

ஒரு சிலருக்கு மட்டுமே சுதந்திரம், அதுவும் அனைவருக்கும் பொதுவான செல்வ வளங்களை கொள்ளையடிக்க சுதந்திரம் இருப்பதும், ஆனால் கோடான கோடி மக்கள் பசி, பட்டினி, வறுமை ஆகிய கொடுமைகளால் வாடி மடியும் நிலை இருப்பதும் எப்படி சுதந்திரமாகும்? எனவே, உண்மையான விடுதலைக்காக, விரிவான பூரண விடுதலைக்காக எல்லோரும் எல்லாமும் பெறுகிற "சோசலிச சமுதாயம்" காண எங்கள் முழு ஆற்றலையும் பயன்படுத்துவோம்.

அதற்காக எங்கள் இன்னுயிரையும் தியாகம் செய்ய கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

ஆம்! நாங்கள் கம்யூனிஸ்டுகள் மனித குலம் அமைதியாக வாழ உலக சமாதானத்தை நேசிக்கின்றோம். எனவே, மனிதனை மனிதன் அடித்து கொன்றொழிக்கும் போர்களை எதிர்க்கின்றோம். ஒரு நாட்டின் நலனுக்காக அல்லது நிதி மூலதனத்தின் கொள்ளைக்காக நடத்தப்படும் போரில் பல லட்சக்கணக்கான மக்கள் மடிந்து போவதற்கும், மனித வாழ்வுக்கு அவசியமாகவுள்ள செல்வ வளங்கள் அழிக்கப்படுவதற்கும் நாங்கள் எதிரிகள்.

ஆகவே, உண்மையான சமாதானத்திற்கான, நிறைவான சமாதானத்திற்கான உத்தரவாதத்தை அளிக்கும் சமுதாய அமைப்பை ஏற்படுத்துவதற்காக எல்லாவிதமான தியாகங்களையும் செய்ய கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் எங்கள் நாட்டை நேசிக்கின்றோம். உன்னதமான தேசபக்த கருத்துக்களால் உத்வேகம் பெற்ற எங்களின் நாட்டுப் பற்று உயர்ந்த கோட்பாடுகளை நோக்கமாகக் கொண்டது. ஒன்று அந்நிய ஆட்சியாளர்களிடமிருந்து விடுதலை, இரண்டாவது உள்நாட்டில் உள்ள ஆதிக்கம், ஒடுக்குமுறை, சுரண்டல் ஆகியவற்றிலிருந்து விடுதலை ஆகியவையாகும்.

மேலும் "உலக தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்" என்ற எக்காலத்திலும் அழியாத தொழிலாளி வர்க்க சர்வதேசியம் கம்யூனிஸ்டுகளின் உயிர் மூச்சாகும். மக்கள் நலன் சார்ந்த நாட்டுப்பற்றுக்கு எதிரான சக்திகள் ஏகாதிபத்தியம், நிதி மூலதனம், பாசிசம் ஆகியவையாகும். ஆகவே, தேச பக்தர்களாகிய, சர்வதேசவாதிகளாகிய நாங்கள், ஏகாதிபத்தியத்தையும், நிதி மூலதன முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தையும், மக்களை பிளவுபடுத்தும் பாசிசத்தையும் வீழ்த்த சர்வபரி தியாகங்களையும் செய்ய தயாராக இருக்கின்றோம்.

தூக்குமேடை ஏறத் தயார்
சுடும் துப்பாக்கி முன் நிற்கத் தயார்
எங்கள் நோக்கம் நிறைவேற
எந்தத் தியாகமும் செய்யத் தயார்
ஆம், நாங்கள் கம்யூனிஸ்டுகள்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 98 ஆவது அமைப்பு தினத்தில், இந்திய உழைக்கும் மக்களின் நலன்காக்க, இந்தியாவின் செல்வ வளங்களை பாதுகாக்க, விவசாயிகளின் நலன் காக்க, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க, தமிழ்நாட்டின் உரிமைகளைப் பாதுகாக்க, மதவெறி பாசிச சக்திகளை வீழ்த்த எந்த தியாகமும் செய்யத் தயார் என உறுதியேற்போம்!

தொடர்புக்கு: 94427 36668


சிறப்பிதழ் சிறக்க வாழ்த்துகிறோம்!

NFTE

NFTE - BSNL

தமிழ்நாடு வட்டம்
2, கோவூர் வைத்தியநாதன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600002.



டி.எம்.மூர்த்தி

# மங்காத மாமனிதர் தங்கமணி!

**தோழர் கே.டி.கே. தங்கமணி அவர்கள் மறைந்து 21 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. அவரை நேரில் பார்த்திராத, கேட்டும், படித்தும் அறிந்துள்ள புதிய தலைமுறை வந்து கொண்டிருக்கிறது. அதே சமயத்தில் அவரோடு பேசி, பழகி உறவாடிய தலைமுறை விடை பெற்றுக் கொண்டிருக்கிறது.**


கம்யூனிஸ்ட் இயக்கம் கண்டெடுத்த ஆகச்சிறந்த மாமனிதர்களில் தோழர் கே.டி.கே.யும் ஒருவர். பெரும் கோடீஸ்வரர் வீட்டில் பிறந்தவர். திருமங்கலம், மதுரை, சென்னை ஆகிய இடங்களில் பள்ளி, கல்லூரி படிப்பை முடித்தது மட்டுமில்லாமல், லண்டனுக்குச் சென்று சட்டம் பயின்று பார்அட்லா பட்டம் பெற்றவர். இந்திய வரலாற்றில் சிறப்புமிக்க மனிதர்களான இந்திராகாந்தி, பூபேஷ் குப்தா, ஜோதிபாசு, இந்திரஜித் குப்தா, மோகன் குமாரமங்கலம், பார்வதி குமாரமங்கலம், என்.கே. கிருஷ்ணன், பெரோஸ் காந்தி ஆகியோரை கல்லூரித் தோழர்களாகக் கொண்டு பழகியவர்.

**சிறந்த தர்க்க ஞானமிக்க வழக்கறிஞர். நாட்டின் விடுதலைப் போராட்டத்திலும் பின்னர் உழைக்கும் மக்களுக்கான போராட்டங்களிலும் அரை நூற்றாண்டுகளுக்கும் அதிகமாக பங்கேற்றவர். அதற்காக, பிரிட்டிஷ் இந்தியாவிலும், விடுதலை பெற்ற இந்தியாவிலும் எட்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்றவர். சொல்லிமாளாத சிறைக்கூட சித்திரவதைகளுக்கு ஆளானவர்.**

இந்திய நாடாளுமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு சட்ட மன்ற உறுப்பினராகவும் பணிபுரிந்தவர். இ.எஸ்.ஐ. எனச் சொல்லப்படுகிற தொழிலாளர் அரசு மருத்துவக் காப்பீட்டு திட்டம் நாடாளுமன்றத்தில் முழுமையாக இரண்டு நாட்கள் விவாதிக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு நோய் நொடியும், விபத்து ஏற்பட்டால் முதலாளிகள் கைவிட்டு விடுவார்கள் என்பதால், மாதந்தோறும் முதலாளிகளிடமும் தொழிலாளிகளிடமும் நிதிப் பங்களிப்பு பெற்றுக்கொண்டு, அரசாங்கமே தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்திற்கும் மருத்துவ சிகிச்சை அளிக்கும் திட்டம் இது. பல்வேறு வளர்ந்த நாடுகளுக்கு சமமாக இந்தத் திட்டம் உருவாக்கப் படுவதற்கு நாடாளுமன்றத்தில் தோழர் கே.டி.கே. வாதிட்ட முறை அற்புதமானது. இன்றும் அது நாடாளுமன்ற பதிவேடுகளிலே இருக்கிறது.

அதுபோலவேதான் போக்குவரத்து தொழிலாளர், உள்ளாட்சித் தொழிலாளர், பஞ்சாலை தொழிலாளர் உள்ளிட்ட சகல பகுதி தொழிலாளர்களுக்காகவும் சட்டப்பேரவையில் அவர் வாதிட்டு இருக்கிறார். பல்வேறு சட்டங்கள் உருவாக்கப்படுவதற்கும், செயல்படுத்தப்படுவதற்கும், தொழிலாளர் பிரச்சனைகள் அரசின் உரிய கவனம் பெற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கும் அவர் காரணமாக இருந்திருக்கிறார்.

அவர் எளிமையாக இருந்ததைப் பலரும் சொல்வார்கள். அது அவரது இயல்பான பழக்கமாக இருந்தது. மதுரையில் சாலையோர உணவு கடைகள் அநேகம். எந்த கடையிலும் போய், முக்காலியில் அமர்ந்து கொண்டு கையில் தட்டை வைத்துக் கொண்டு சாப்பிடுவார்.



அவருக்கு அவர் வாழ்நாளில் பெரிதாகத் தோன்றியவை, அவர் வியட்நாமின் புரட்சித்தலைவர் ஹோசிமின்னையும், சீன புரட்சியாளர் மாசேதுங்கையும் நேரடியாக சந்தித்துப் பேசிய நிகழ்வுகள்தான்.

**1946ல் சிங்கப்பூர் சென்றபோது, அங்குள்ள கட்சி தோழர்கள் தலைமறைவாக இருந்த வியட்நாமின் புரட்சித்தலைவர் ஹோசிமின்னைச் சந்திக்க அழைத்துச் சென்றிருக்கிறார்கள். பின்னாளில் வியட்நாமின் குடியரசுத்தலைவராக ஹோசிமின் டில்லி வந்த போது, கே.டி.கே. நாடாளுமன்ற உறுப்பினர். பிரதமர் நேரு, இவரை ஹோசிமின் னிடம் அறிமுகப்படுத்தியபோது, இவரை எனக்கு நன்றாக தெரியும், ஒரு நாள் முழுக்க என்னோடு இருந்திருக்கிறார் என்று சொன்னாராம்.**

அதேபோல, ஏஐடியுசி சார்பில் சீனா சென்றிருந்த போது, தலைவர் மாவோவை சந்தித்தது. வெளிநாட்டினரிடம் எச்சரிக் கையாக இருக்கும் மாவோ, இந்தியர் அதிலும் சிங்காரவேலர் ஊரிலிருந்து வருபவர் என்றதும் ஓரடி முன்வந்து கே.டி.கே.யுடன் கைகுலுக்கினாராம். இவற்றைச் சொல்லும்போதே கே.டி.கே. முகத்தில் தனி ஒளி உண்டாகும்.

அதேபோல சிங்காரவேலருடனான அவரது பழக்கம். “தொழிலாளிகளுக்காகப் பரிந்து பேசும்போது, தம்மை மிக நல்லவர் போல் காட்டிக்கொள்ள முதலாளிகள் பல்வேறு வாதங்களை சாதுரியமாக வைப்பார்கள். அவர்களைச் சந்திக்கும் முன்பே இவர் சொல்வதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று மூன்று முறை நெஞ்சில் குத்திக் கொண்டு அப்புறம் போய் சந்தியுங்கள்” என்று சிங்காரவேலர் சொன்னாராம். கே.டி.கே. இதைச் சொல்லி நீங்களும் இதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள் என்பார்.

கே.டி.கே.யை பொது வாழ்வுக்கு வாருங்கள் என்று இழுத்து வந்த திரு.வி.க மீது அவர் பெருமதிப்பு வைத்திருந்தார். விடுதலைக்குப் போராடிய இந்த உத்தமர்கள் மீது, விடுதலை அடைந்த தேசத்தின் காங்கிரஸ் அரசு பிரயோகித்த அடக்கு முறையின் போது, அவரோடு சிறையிலிருந்து சித்திரவ தைகளை அனுபவித்த தோழர்களையும், குறிப்பாக ஐ.வி. சுப்பையாவின் உயிர்த் தியாகத்தையும், பூந்தோட்டம் சுப்பையாவின் கட்சி மீதான பக்தியையும், டி.வி.எஸ்.ஸில் வேலை நிறுத்தம் செய்து கொடுமைகளை அனுபவித்த தோழர்களையும் பற்றி நெக்குருகப் பேசுவார். பி. ராமமூர்த்தி அவர்களை மிகவும் நேசிப்பார்; என் தலைவர் என்று சொல்வார்.

இடத்தை இட்டு நிரப்ப முடியாத பேராளுமை கொண்ட தலைவர்களை நாம் இழந்திருக்கிறோம். அதில் முன்வரிசையில் நிலைத்து நிற்பவர் தோழர் கே.டி.கே. தங்கமணி.

**தொடர்புக்கு: 73971 30367**

---



அ.பாஸ்கர்

# வெண்மணி தியாகிகளு

**தமிழ்நாட்டின் தொழிலாளர் போராட்ட வரலாற்றிலும் “சாதி” உழைப்போர் உரிமையை பறிக்கும் ஆயுதமாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் கோரமுகம் ஒன்று வெண்மணி கிராமத்தில் 1968 டிசம்பர் 25ல் வெளிப்பட்டது.**

உழவுத் தொழிலின் உயிர்நாடியாக உள்ள விவசாயத் தொழிலாளர்கள், தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான காவிரி பாயும் புண்ணிய பூமியில், பெற்று வந்த, கூலி (ஊதியம்) வயிற்றுக்கு போதவில்லை, ஒரு அரைப்படி நெல் சேர்த்துக் கொடுங்கள் என்று கோரிக்கை வைத்தனர்.

அதிகாராச் செருக்கும், ஆணவமும் தலைக் கேறிய நிலபிரபுத்துவம், மனித வேட்டையாடும் வெறியோடும், கொலைக் கருவிகளோடும் வெண்மணி கிராமத்தில் தாண்டவம் ஆடியது.

அடிமை சங்கிலியை அறுத்து, நிலபிரபுத்துவக் கோட்டைகளை தகர்க்க செங்கொடி இயக்கத்தை கட்டியமைக்கும் பணியை விடுதலைப் போராட்ட வீரர், தியாக சீலர் பி.சீனிவாசராவ் தஞ்சை மாவட்டத்தில் தொடங்கினார். செங்கொடி இயக்கத்தில் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஒருசேர, ஒரே அமைப்பில் அணிதிரட்டப்பட்டனர்.

**அடிமைப்பட்ட மக்களுக்கு விடியல் தந்த சூரியனாக, உயிர் காக்க வந்த காவல் தெய்வமாக கிராமங்கள் தோறும் செங்கொடிகள் பறந்தன. உழுபவருக்கே நிலம் என்ற உரிமை முழக்கம் விண்ணதிர எழும்பியது.**

தொடர்ந்து குடிமனைக்கான போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. குத்தகை என்கிற பெயரில் விளைந்ததை முழுவதும் அள்ளிச் செல்லும் முறைக்கு எதிரான கோரிக்கை வைக்கப்பட்டது.

குத்தகைக் குறைப்புக்கான போராட்டம், கூலி உரிமைப் போராட்டம் எனப் போராட்டங்கள் திசையெட்டும் தீவிரமாக பரவிப் படர்ந்து நடந்தன. 1968 ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் முழுவதும் விவசாயத் தொழிலாளர்கள் தங்கள் பெற்று வந்த அறுவடைக் கூலியில், அரைப்படி நெல் அதிகரித்து தர வேண்டும் எனக் கோரி நடைப்பெற்றது. நெல்



உற்பத்தியாளர் சங்கம் உருவாக்கப் பட்டது. இதன் கிளைகள் மாவட்டம் முழுவதும் பல இடங்களில் தொடங்கி விவசாயத் தொழி லாளர்கள் மீது மூர்க்கத்தனமாக தாக்குதல் நடத்தப்பட்டது.

சட்டத்தை கையில் எடுத்துக் கொண்ட வன்முறை கும்பலுக்கு, இரிஞ்சியூர் கோபாலகிருஷ்ண நாயுடு தலைமை தாங்கி செயல்பட்டார்.

அரைப்படி நெல் கூடுதலாக கூலி கொடுக்க நெல் உற்பத்தியாளர் சங்கத்தினர் மறுத்தனர்.

தன்னிடம் கைகட்டி வாய் பொத்தி அடிமையாய் இருந்தவர்கள் நம்மை எதிர்க்க துணிந்து விட்டார்களே என்று எண்ணிய இரிஞ்சியூர் கோபாலகிருஷ்ணனும், அவரது அடியாட்களும், குண்டர்களும், 1968 டிசம்பர் 25 அன்று கீழ வெண்மணியில் விவசாய தொழிலாளர்கள் மீது நேரடித் தாக்குதலை நடத்தினர். அது நள்ளிரவு வரை நீடித்தது.

பச்சிளம் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என 44 விவசாயத் தொழிலாளர்கள் ராமையாவின் குடிசையில் தஞ்சமடைந்த போது, அவர்களை உள்ளே வைத்து பூட்டி குடிசைக்கு தீ வைத்து கொளுத்தி, தீயில் அங்கம் எரிந்து எழுப்பிய கூக்குரலை கேட்டுவிட்டுத் திரும்பியது அந்தக் கொலைகார கும்பல்.

டிசம்பர் 25 இயேசு பிரான் அவதரித்த நாளில், அன்னை வேளாங்கண்ணி மாதா கோவிலில் திருப்பள்ளி பாடி வழிபட்டனர். கீழ வெண்மணியில் அரைப்படி நெல் கூலி உயர்வு கேட்டதற்காக விவசாயத் தொழிலாளர்கள் குடி சையோடு தீயிட்டுக்





# இன்றைய தலைமுறைக்கு முன்னுதாரணம் இரா.நல்லகண்ணு

**இன்றைய தலைமுறை பிரம்பித்து பார்க்கும் பெரிய வரலாற்றுக்குச் சொந்தக்காரர் தோழர் இரா.நல்லகண்ணு. காந்திய எளிமையும், ஏந்திய கொள்கையில் எரிமலை கனப்பும் ஒருங்கே பெற்ற போராளி.**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பிறந்த 1925 டிசம்பர் 26 அன்றுதான் இரா. நல்லகண்ணு பிறந்தார். தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டத்தில் ராமசாமி – கருப்பாயி தம்பதியினருக்கு மூன்றாவது குழந்தையாக நல்லகண்ணு பிறந்தார்.

திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் இண்டர் மீடியட் படித்தபோது திருவைகுண்டத்தில் கலைத் தொண்டர் கழகம் என்ற அமைப்பை உருவாக்கினார். 1944ல் திருவைகுண்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை உருவாக்கப்பட்டது. இதில் முத்தையா, ராமசுப்பிரமணியம், திருமூலநாதர் ஆகியோருடன் இணைந்து கிளையின் செயலாளராக நல்லகண்ணு பணியாற்றினார்.

நான்குநேரி வட்டார விவசாய சங்க ஊழியராக தோழர்கள் பாலதண்டாயுதம், இ.தளவாய், என் .வானமாமலை, என்.டி.வானமாமலை, வி.எஸ்.காந்தி ஆகியோருடன் இணைந்து பணியாற்றினார்.

நாங்குநேரி ஜீயர் மடம், திருக்குருங்குடி ஜீயர் மடம், களக்காடு கடமநேரி பண்ணையார் ஆகியோரை எதிர்த்து "பட்டமரக்கால் கூடாது முத்திரை மரக்கால் வேண்டும்" என்ற கோரிக்கைகளை முன்வைத்து விவசாயிகளை திரட்டி போராட்டங்களை நடத்தினார்.

கட்சி தடை செய்யப்பட்ட காலத்தில் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்த இவர் தேடப்படும் தீவிரவாதிகளைப் போல 1948 டிசம்பர் 20 நள்ளிரவில் நாங்குநேரிக்கு அருகில் உள்ள புலியூர் குறிச்சி என்ற கிராமத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட தோழர் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டார்.

**சிறைச்சாலையில் இவரிடமிருந்து உண்மைகளை வரவழைக்க காவல்துறையினர் கொடிய சித்திரவதைகள் கட்டவிழ்த்து விட்டனர். இரண்டு கைகளையும் பின்புறம் கட்டி வீதிவழியே அடித்து இழுத்துச் சென்றனர். ஒரு காவல்துறையின் அடியாள் அவரது அடர்த்தியான மீசையை சிகரட்டின் தீ முனையால் கொளுத்தினான். வெந்து மடிந்தது மீசை. இதன் காரணமாகவே அவர் அன்று முதல் மீசை வைப்பதில்லை.**

நாங்குநேரி சப் ஜெயில், கொக்கரக்குளம் ஜெயில், மதுரை ஜெயில் ஆகியவற்றில் இரா.நல்லகண்ணு தனது இளமைக் காலத்தை கழித்தார். சிறையில் இருக்கும்போது நெல்லை சதிவழக்கிலும் இணைக்கப்பட்டார்.

**நீதிமன்றம் இவருக்கு ஆயுள் தண்டனை வழங்கியது. மேலும், அவரை கைது செய்த போது வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டதாகவும் அதற்கு ஆறு வருட சிறை தண்டனையும் சேர்த்து வழங்கப்பட்டது. ஆயினும், ஏழாண்டுகள் சிறை வாழ்வுக்குப் பின்பு 1956 டிசம்பர் 13 அன்று மதுரை சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்.**

காட்சிக்கு எளிமையாக காணப்பட்டாலும், கடுமையான படிப்பாளி. ஜனசக்தி, நவசக்தி, சாந்தி போன்ற பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதி வந்தார்.

மதுரை சிறையில் இருந்தபோது, சுடலைமாடன் எனும் தலைப்பில் சாந்தி இதழில் எழுதிய கட்டுரையில் குறிப்பிடுவதாவது:

1949களில் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் விவசாய சங்க இயக்கங்கள் மீது அரசின் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. பாப்பாங்குளத்தில் பாலதண்டாயுதம், மீனாட்சி நாதன் உள்ளிட்ட தலைவர்கள் தலைமறைவாக இருப்பதாகக் கேள்விப்பட்டு, காவல்துறை விரைந்தது.

முக்கிய ஊழியர்களை பிடிக்க வலை வீசினர். வீடுகள் சூறையாடப்பட்டன. தோழர் சுடலைமாடனையும் போலீஸ் தேடியது. இவர் 1945ல் வைத்தியர் சண்முகம் தலைமையில் அமைக்கப்பட்ட 'இந்திரகுல வேளாளர் சமூக சீர்திருத்த சங்கத்தில்' தீவிரமாக செயல்பட்டவர். சுடலைமாடன் விவசாய சங்கத்தில் இணைந்து போராட்டங்கள் நடத்தினார். சுடலை மாடன் சிறையில் இருந்தபோது அவரது குடும்பத்தை கவனிக்க இயலவில்லை.

விவசாயப் பெருங்குடி மக்களே! கிராமத்தில் ஜனநாயகம் தழைக்க பாடுபட்ட விவசாய சங்க ஊழியர் சுடலைமாடனை ஆயுள் தண்டனையை அனுபவிக்க விடலாமா? என்று சாந்தி பத்திரிகை கட்டுரையில் நல்லகண்ணு குறிப்பிட்டிருந்தார்.

இந்திய அரசியல் அமைப்பு நிலை குறித்து ஆழமாக ஆய்வு செய்யக்கூடியவர் இரா.நல்லகண்ணு. பலரோடு கருத்துப் பரிமாற்றம் செய்து அதன் பின்பே நிதானமாக முடிவு எடுப்பார்.





முடிவுகள் எடுத்தவுடன் செயல்பாட்டில் தீவிரம் காட்டுவார். கூட்டுத் தலைமைக்கு முக்கியத்துவம் தரக்கூடியவர். உட்கட்சி ஜனநாயகத்தை உறுதியாகக் கடைபிடிப்பவர். இலக்கியத்தில் ஆளுமை மிக்கவர்.

ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் 'நீரியியல் மேலாண்மை குறித்த கருத்தரங்கம்' புதுச்சேரியில் நடைபெற்றது. அதில் நல்லகண்ணு கலந்து கொண்டு நீரியியல் மேலாண்மை குறித்து ஆங்கிலத்தில் உரையாற்றினார். அவரது விசால அறிவைக் கண்டு அனைவரும் வியந்து பாராட்டினர்.

**சூழலியலாளர்கள், கலைத்துறையினர், மாணவர்கள், இளைஞர்கள், பத்திரிகையாளர்கள் என்று எப்போதும் சூழ்ந்து விவாதிக்கும் களமாக அவரும், அவரது இல்லம் இருந்திருக்கிறது. அது இப்போதும் தொடர்கிறது.**

---



கொளுத்தப்பட்டனர்.

கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் மக்களுக்கு ஆறுதல் சொன்னது மட்டும் அல்ல, கொடுஞ் செயல் புரிந்த குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கும் சட்டப் போராட்டத் திலும் இறங்கினர். நீண்ட போராட்டத்திற்கு பின்னர் நாகப்பட்டினம் நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கியது.

**இதனை எதிர்த்து குற்றவாளிகள் சென்னை உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்தனர். உயர்நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவர் கள் "மிராசுதார்கள், சொந்தமாக "கார்" வைத் திருக்கிறார்கள். தும்பைப் பூ போல் வெள்ளை ஆடை அணிகிறார்கள். இப்படிப்பட்ட கண்ணி யவான்கள் இதுபோன்ற கொடுங் குற்றத்தை செய்திருக்க மாட்டார்கள் எனக் கூறி அந்த மனித மிருகங்கள் விடுதலை செய்யப்பட்டன.**

சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை கண்டித்து மாவட்டம் முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டியது, கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்பது வர லாற்றில் பதிந்து இருக்கும் உண்மையாகும்.

உயர்நீதிமன்ற தீர்ப்பைக் கண்டித்து நாட்டில் நடைப்பெற்ற முதல் போராட்டம் இதுவாகும். மதத்தின் பெயரால், சாதிகள் நியாயப்படுத்தும் வரை, சாதிகளில் மேன் மை எனும் இழிவு கருத் தியல் இருக்கும் வரை தீர்வுக்கு வழியில்லை...

பன்மைப் பண்போடு, மனித உரிமைகள் மதிக் கப்படும் ஒரு சூழல் உருவாக வேண்டும். இதற்கு மதச்சார்பற்ற, ஜனநாயக சக்திகள் ஜனநாயக புரட்சியை முன்னெடுக்க வேண்டும்.

இந்தத் திசைவழியில் உறுதியுடன் பயணிப் போம் என வெண்மணி தியாகிகள் பெயரில் உறுதி ஏற்போம். வெண்மணி தியாகிகள் திருப் பெயர் நீடூழி வாழ்க!

**தொடர்புக்கு: 94884 88339**



# நக்கு வீர வணக்கம்!

## தமிழ்நாட்டின் முக்கிய நிகழ்வுகள்


| | | |
|---|---|---|
| 1866 | ஜனவரி 24 | சென்னை பல்கலைக்கழகம் துவக்கம் |
| 1886 | மே 1 | சென்னையில் சிங்காரவேலர் மே தினம் கொண்டாடினார் |
| 1908 | பிப்ரவரி 27 | கோரல்மில்லில்வ.உ.சி.தலைமையில் வேலை நிறுத்தம் |
| 1925 | நவம்பர் 25 | சுயமரியாதை இயக்கம் துவக்கம் |
| 1926 | ஜூலை 1 | தமிழ்நாடு மின்வாரியம் துவங்கப்பட ஒப்பந்தம் |
| 1936 | நவம்பர் 7 | ஜனசக்தி துவக்கம் |
| 1946 | ஆகஸ்ட் 28 | மாபெரும் ரயில்வே வேலை நிறுத்தம் |
| 1946 | செப்டம்பர் 5 | பொன்மலை தியாகிகள் தினம் |
| 1948 | நவம்பர் 11 | கோவை ஸ்டோன்ஸ் மில் தியாகிகள் தினம் |
| 1949 | ஆகஸ்ட் 11 | கடலூர் சிறையில் துப்பாக்கிச் சூடு |
| 1949 | நவ.19 | மாரி, மணவாளன் மதுரையில் கொல் லப்பட்ட தினம் |
| 1956 | நவம்பர் 1 | தமிழகம் பிறந்தது |
| 1958 | டிசம்பர் 14 | தாமரை மாத இதழ் துவக்கம் |
| 1968 | டிசம்பர் 25 | வெண்மணி தியாகிகள் தினம் |
| 1972 | ஜூலை 5 | பெத்தநாயக்கன் பாளையம் விவசாயிகள் மீது துப்பாக்கிச் சூடு |



சி.மகேந்திரன்

**வாழ்நாளில் சரியாக மூன்றில் ஒரு பகுதி காலம் இவர் சிறையில் வாழ்ந்திருக்கிறார். இதில் இளமைப் பருவ வாழ்க்கையை கழித்து விட்டால் சிறைக்குள் வாழ்ந்த காலம் சரி பாதி என்றுகூட சொல்லலாம். இவ்வாறான ஒரு போராட்ட வாழ்க்கை உலகில் யாருக்காவது இருந்திருக்குமா?**

# புரட்சியாளன்



# அமீர் ஹைதர்கான்

மாபெரும் வீரத்தையும், அர்ப்பணிப்பையும் தன்நெஞ்சத்தில் சுமந்த மாபெரும் புரட்சியாளன்தான் அமீர்ஹைதர்கான். இவர் பாகிஸ்தானில் 1989ம் ஆண்டு டிசம்பர் 26ல் தனது 89வது வயதில் மரணமுற்றார்.

அமீர் ஹைதர்கான் பிறந்த ஊர் ஒரு காலத்தில் ஒன்றுபட்ட இந்தியாவில் இருந்தது. இப்போது பாகிஸ்தானில் உள்ளது. கலியன் இலாரியன் எனும் கிராமத்தில் பிறந்தார். ராவல்பிண்டியின் கல்லார் மாவட்டத்தில் இந்த ஊர் உள்ளது.

அமீர் ஹைதர் கான் வாழ்க்கை வீரசாகசங்களை கொண்டது வீட்டை விட்டு வெளியேறியவர் ஒரு கப்பலில் எடுபிடி வேலை செய்பவராக பணியில் சேருகிறார். பின்னர் கப்பல் மாலுமியாக பதவி உயர்வு பெற்று அமெரிக்கா சென்று ஒரு மோட்டார் கம்பெனியில் பணியில் அமர்ந்த இவர் சிறிது காலத்தில் விமானம் ஓட்டும் பயிற்சி பெற்று விமானியாக வளர்ச்சி பெறுகிறார். இந்த நேரத்தில்தான் புதிய திருப்பம் இவரது வாழ்க்கையில் நிகழ்கிறது.

அமெரிக்காவில் இந்திய விடுதலையில் தீவிரம் கொண்ட ஒரு கட்சி செயல்படுகிறது. இது அடிப்படையில் கம்யூனிச கொள்கைகளை ஏற்றுக் கொள்கிற கட்சி. இதன் பெயர் கதார் கட்சி. பிற்காலத்தில் இக்கட்சியில் இருந்தவர்கள் பலர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் தங்களை இணைத்துக் கொண்டார்கள்.

அமெரிக்காவில் அந்தக் கட்சியில் இணைந்த அமீர் ஹைதர்கான் 1928ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு திரும்பி வந்தார். வெளிநாடுகளில் இருந்து இந்தியாவில் தடை செய்யப்பட்ட கம்யூனிச நூல்களை புரட்சிக் குழுக்களுடன் கொண்டுபோய் சேர்க்கும் கடமையில் ஈடுபட்டிருந்தார்.

பிரிட்டிஷ் உளவுப்படையின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு எவ்வாறு இந்த புத்தகங்களை கொண்டு வருவது என்ற தந்திரத்தை இவர் அறிந்திருந்தார்.

இந்த காலத்தில் இவர் திறமை அறிந்து மூன்றாவது கம்யூனிச அகிலம் இவரை தேர்வு செய்து ஒரு பொறுப்பையும் அளித்திருந்தது. கம்யூனிச அகிலத்திற்கும் இந்தியாவில் உள்ள கம்யூனிஸ்ட் குழுக்களுக்கும் இடையில் ஒருங்கிணைப்பை உருவாக்கும் பொறுப்பு அது.

**இந்த நேரத்தில் கம்யூனிஸ்ட்களை ஒழித்துக் கட்டும் சதி திட்டத்தை தீட்டி அதை ஒரு மனித வேட்டையாக மாற்றிக் கொண்டிருந்தது பிரிட்டிஷ் அரசு. கம்யூனிஸ்ட்கள் மீது பொய்யான வழக்குகளை திரைமறைவில் செய்தது. அதில் கான்பூர் சதிவழக்கு, மீரட் சதி வழக்கு ஆகியவை முக்கியமானவை.**

மீரத் சதி வழக்கில் அமீர் ஹைதர்கான் குற்றவாளியாக சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்தியாவில் கம்யூனிஸ்ட் அமைப்பு நிலையை கட்டி அமைக்க சென்னைக்கு அனுப்பப்படுகிறார் ஹைதர்கான். அவருக்கு சென்னை அந்நியப்பட்ட பிரதேசம். அவர் உலகின் பல மொழிகளை கற்றறிந்தவர்தான். ஆனால் தமிழ் தெரியாது.

கடினமான தலைமறைவு வாழ்க்கை காவல்துறை வெறி கொண்டு சுற்றிசுற்றி அலைந்து கொண்டிருக்கும் சூழல். இந்த பின்புலத்தில் மாணவர்களோடு தொடர்பு கொண்டு மாணவர் அமைப்பை உருவாக்கினார். தொழிற்சாலைகளுக்குச் சென்று தொழிலாளர் அமைப்பை உருவாக்கி அரசியல்படுத்தினார். அன்றைய சென்னை மாகாணத்தில் இவர்தான் பல தோழர்களை கண்டறிந்து அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தார்.

**இந்த பயணத்தில் சிறப்புமிக்க பல தலைவர்களை உருவாக்க முடிந்தது. அவர்கள் பிற்காலத்தில் செயலூக்கும் கொண்டவர்களாக வளர்ச்சி அடைந்தனர். கம்மம்பாடி கே.சத்தியநாராயணா, பி.சுந்தரையா, புதுச்சேரி வ.சுப்பையா, ஆர்யா என்கிற கே.பாஷ்யம் போன்றவர்கள் இதில் குறிப்பிட்டு சொல்லத் தக்கவர்கள்.**

இளம் தொழிலாளர் சங்கம் இவர் பரிசோதித்த அமைப்புகளில் முக்கியமானது. 1932ஆம் ஆண்டில் இதை உருவாக்கினார். ராஜவடிவேலு, வி.கே. நரசிம்மன் மற்றும் ரஷ்ய மாணிக்கம் ஆகியோர் இக்குழுவில் செயல்பட்டனர். ராஜவடிவேலு நீதிக்கட்சியில் இருந்து விலகி ஜனமித்ரன் எனும் பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்தார்.

அவரை அரசியல் படுத்தி அவரது பத்திரிகையின் பெயரை மாற்றி அமைத்தார். முன்னேற்றம் என்பது பத்திரிகையின் புதிய பெயர்.

மூன்றாவது அகிலத்தின் ஆவணங்களை ரகசியமாக தருவித்து தமிழில் இந்தப் பத்திரிகையில் வெளியிடப்பட்டது. தலையங்கத்தை ஹைதர்கான் வழிகாட்டுதலில் ராஜவடிவேலு எழுதினார். அப்போது சங்கர் என அறியப்பட்ட அமீர் ஹைதர் கானின் கட்டுரைகள் இதழில் வெளியிடப்பட்டன. அன்று 500 பிரதிகள் அச்சடிக்கப்பட்டன என்றாலும் அது பெரும் தாக்கத்தை உருவாக்கியது.

அமீர் ஹைதர் கான் மே 1932ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். சங்கர் எனும் பெயர் சென்னை மாகாணத்தின் பிரிட்டிஷ் உளவுத்துறைக்கு ஒரு சவாலாகவே இருந்தார். இவர் கைது செய்யப்பட்ட பின்னர் தான் சங்கர் என்பது உலகில் பல நாடுகளில் தேடப்பட்ட அமீர் ஹைதர்கான் என்பது தெரிய வந்தது.

அமீர்ஹைதர்கானின் சிறைவாழ்க்கை இதன் பின்னர் ஆரம்பமானது. சேலம் சிறை, கோவை சிறை, சென்னை சிறை, ராஜமகேந்திரபுர சிலை, அலிப்புர சிறை, பஞ்சாபில் பல சிறைச்சாலைகள் என்று பல்வேறு சிறைச்சாலைகளில் தனது வாழ்நாளை கழித்தார். இவரது சிறை வாழ்க்கை பெரும் போராட்டங்களை உள்ளடக்கியது.

அஞ்சா நெஞ்சம் கொண்டு போராடியதில் பல்வேறு கொடும் சித்திரவதை கொடுமைகளை அனுபவித்தார். சிறையில் கட்சி ஊழியர்களை தயாரிப்பதில் முழு கவனம் கொண்டிருந்தார்.

**ராஜமகேந்திரபுரம் சிறைச்சாலையில் ஒரு ஜெயிலர் இவ்வாறு கூறியதாகச் சொல்லப்படுகிறது. "அமீர் ஹைதர்கானை கடலில் தூக்கி எறிந்தாலும் கடலில் உள்ள மீன்களையும் கம்யூனிஸ்ட்டாக மாற்றும் திறமை உள்ளவர்" என்று கூறினாராம். அப்படிப்பட்ட மகத்தான தலைவரே அமீர் ஹைதர்தான்.**


ஸ்ரீ லட்சுமி நகர்
தாராபுரம் to பழநி ரோடு
மணக்கடவு பஸ் நிறுத்தம்




அரசு அனுமதி பெற்ற அழகிய வீட்டு மனைகள்
அனைத்து வசதிகளுடன் வீடு கட்டி கொடுக்கப்படும்
வங்கி கடன் வசதி உண்டு

74187 79894
98422 49254
99424 99894

ஸ்ரீ லட்சுமி நகர்
தாராபுரம் மெயின்ரோடு, K.ஆண்டிபாளையம்




அரசு அனுமதி பெற்ற அழகிய வீட்டு மனைகள்
அனைத்து வசதிகளுடன் வீடு கட்டி கொடுக்கப்படும்
வங்கி கடன் வசதி உண்டு

741877 9894
88076 99894
99424 99894



தி.இராமசாமி

# பிரெஞ்சு புரட்சியும் இந்திய அரசியல் சட்டமும்

**உலகத்தில் பல புரட்சிகள் நடந்துள்ளன. அதில் சோவியத் புரட்சிக்கு முன்பு பிரபலமாக உலகறிந்த புரட்சி “பிரெஞ்சு புரட்சி” ஆகும்.**

1847 ல் முதல் கம்யூனிஸ்ட் அகிலம் காரல் மார்க்ஸ், ஏங்கல்ஸ் தலைமையில் கூடியது. உலகத்தில் பல நாடுகளில் இருந்து முற்போக்கு சிந்தனையாளர்கள் ஒன்று கூடினார்கள். அதன் வெளிப்பாடு தான் மார்க்ஸ், ஏங்கல்ஸ் உலகுக்கு அளித்த கம்யூனிஸ்ட் அறிக்கையாகும்.

“உலகத்தொழிலாளர்களே ஒன்று சேருங்கள், நீங்கள் இழப்பதற்கு ஒன்றுமில்லை” என்று சொன்னது உலகத்தொழிலாளர்களை நிமிர்ந்து பார்க்கச் செய்தது. கம்யூனிஸ்ட் அறிக்கையின் முதல்வரியில் “இதுவரை நடைபெற்ற போராட்டங்கள் அனைத்தும் வர்க்கப்போராட்டத்தின் வரலாறுகளே” என்று கூறியது, உலகத்தில் புதிய வர்க்கப்போராட்டங்களை முன்னெடுப்பதற்கு அடிப்படையாக அமைந்தது.

இதன் தொடர்ச்சி தான் 1870ல் பாரீஸ் நகரத்தில் “பாரீஸ் கம்யூன்” கூடியது.

“பாரீஸ் கம்யூன்” கூடியதற்கு பின்பு பாரீஸ் நகரத்து தொழிலாளர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டது. அடிமைப்பட்டு கிடந்த தொழிலாளர்கள் சுதந்திரம் பெற வேண்டும் என்று விரும்பினார்கள்.

**எனவே தொழிலாளர்கள் ஒன்று திரண்டு 1871ல் பாரீஸ் நகரத்தில் மன்னருக்கு எதிராக புரட்சி செய்தார்கள். இதுதான் “பாரீஸ் கம்யூன்” புரட்சி. அவர்கள் சுதந்திரம், ஜனநாயகம், சமத்துவம் என்று முழங்கினார்கள். 10 நாட்கள் புரட்சி நடந்தது. மன்னனை வீழ்த்தி அரசை கைப்பற்றினார்கள். 71 நாட்கள் ஆட்சி நடைபெற்றது. அதன் பின்பு நிலப்பிரபுக்கள், பட்டறை முதலாளிகள் ஒன்றுசேர்ந்து ஆட்சியை கவிழ்த்தார்கள்.**

தொழிலாளி, விவசாயி ஒற்றுமை இல்லாத காரணத்தால்தான் புரட்சி தோல்வியுற்றது என்பது உணரப்பட்டது.


பிரெஞ்சு புரட்சியின் அனுபவங்களை உலகத்தில் பல புரட்சிகர சக்திகள் கவனத்தில் எடுத்துக்கொண்டன. சோவியத் புரட்சி 1917 ல் மாமேதை லெனின் தலைமையில் வெற்றி பெற்றது.

புரட்சிகளின் வெற்றிக்குப் பின் சுதந்திரம், ஜனநாயகம், சமத்துவம் கொள்கைகளுக்கான போராட்டங்களும் தொடர்ந்தன.

1947 ஆகஸ்ட்டு 15ல் இந்தியா விடுதலை பெற்றது. இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு சோவியத் புரட்சி உத்வேகம் ஊட்டியது.

விடுதலைக்கு பின்பு இந்திய குடியரசு சட்டங்கள் உருவாக்க அண்ணல் அம்பேத்கர் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. 1950 ஜனவரி 26 இந்தியா குடியரசானது.

அண்ணல் அம்பேத்கர் அவர்கள் லண்டனில் பயின்றவர். உலகத்தின் பல நாடுகளின் அனுபவங்களை, புரட்சிகளை கற்றுணர்ந்தவர். உலகத்தில் அதிகமான புத்தகங்களை கற்றறிந்த மேதை அண்ணல் அம்பேத்கர். இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தை வடிவமைப்பதில் சிறப்பாக செயல்பட்டார்.



இந்திய அரசியல் சட்டம் சுதந்திரம், ஜனநாயகத்தை உறுதிப்படுத்துகிறது. சோசலித்தை நோக்கி நகர்வதற்கான பாதை காட்டுகிறது.

அரசியல் சட்டத்தின் முகவுரையில் இந்தியா “மதச்சார்பற்ற ஜனநாயக சோசலிசக் குடியரசு” என்று எழுதப்பட்டுள்ளது.

இந்திய அரசியல் சட்டம் சிறப்பாக வெளிவர காரணமாக பிரெஞ்சு புரட்சியின் முழக்கங்கள் அடிப்படையாக அமைந்திருக்கிறது. பிரெஞ்சு புரட்சி ஏற்பட இரண்டாம் கம்யூனிஸ்ட் அகிலம் தான் காரணம் என்பது வரலாறாக உள்ளது.

காரல் மார்க்சின் கம்யூனிஸ்ட் அறிக்கையும், உலகப்புகழ்பெற்ற மூலதனம் நூல்பொருள்உற்பத்தி,உபரி,லாபம்,சுரண்டல் இவைகளைப்பற்றி விளக்கமளிக்கும் மூலதனம் நூல் உருவாவதற்கும், அதற்கு முந்தைய அறிஞர்கள் அடிப்படையாக அமைந்துள்ளார்கள்.

ஹெகல், ஒவன், பிளக்னெவ் போன்றவர்கள் முன்னோடியாக இருந்துள்ளார்கள்.

அதே போல இந்திய அரசியல் சட்டம் உருவாக உலகப் புரட்சிகளிலும் சுதந்திரம், ஜனநாயகம், சமத்துவம் போன்ற முழக்கங்களும் அடிப்படையாக அமைந்துள்ளது.

இந்த முழக்கங்களை யார் எதிர்க்கின்றார்களோ அவர்களெல்லாம் சமுதாய மாற்றத்திற்கான எதிரிகள். அடிமைத்தனம் தொடர வேண்டும் என்று விரும்புவர்கள். தன்னை ஆதிக்க வர்க்க பட்டியலில் இணைத்துக்கொண்டவர்கள்.

இந்த பட்டியலில் இணைந்துள்ள நபர் தான் பா.ஜ.க.வின் முக்கிய தலைவராக விளங்குபவர் சுப்பிரமணிய சுவாமி. இவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், அரசியல் சட்டத்தின் பால் பதவிப்பிரமானம் எடுத்துக்கொண்டவர். அரசியல் சட்டத்திற்கு விசுவாசமாக நடப்பேன் என்று உறுதி பூண்டவர்.

**சுப்பிரமணிய சுவாமி அரசியல் சட்டத்தின் அடிப்படையையே தகர்க்கும் முறையில், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் சீரிய சிந்தனையை சிதைக்கும் முறையில், அரசியல் சட்டத்தின் முகவுரையில் குறிப்பிடப்பட்டுள்ள மதச்சார்பற்ற ஜனநாயக சோசலிசம் என்பதை நீக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.**

உலகமயம், தனியார்மயம், தாராளமயம் கொள்கைகள் ஏகாதிபத்தியத்தை கார்ப்ரேட்டுகளாக மாற்றியுள்ளது. ஒரு சிலர் உலக பணக்காரர்களாக மாற்றியுள்ளார்கள். வறுமை, வேலையின்மை உலகெங்கும் பரவி வருகிறது.

இந்த உலகமயக் கொள்கைக்கு, முதலாளித்துவக் கொள்கைக்கு மாற்று சோசலிசம் தான், விஞ்ஞான சோசலிசம் தான் என்பதை தற்போது நடந்து வரும் உலக சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்ற நேரத்தில், சோசலித்தை நீக்க வேண்டும் என்று சு.சாமி வழக்கு தொடுத்துள்ளார்.

இதை எதிர்த்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் பினாய் விஸ்வம் எம்.பி. வழக்கு தொடர்ந்துள்ளார்.

அரசியல் சட்டத்தை சிதைக்கும் போக்குகள் ஒன்றியத்தை ஆட்சி செய்யும் மோடி அரசாலும், அந்த கட்சியை சேர்ந்த நபர்களாலும் உருவாக்கப்படுகிறது.

**உலகப்புரட்சிகளின் அனுபவத்தில் உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டத்தை பேணிப் பாதுகாக்க வேண்டும். அதன் மூலம் நாட்டை பாதுகாக்க போராடுவோம்.**

அரசியல் சட்டத்தை சீர்குலைக்க முயலும் பா.ஜ.க. ஆட்சியாளர்களை அகற்றும் வரை ஒன்றிணைத்து போராடுவோம் போராடுவோம்!

தொடர்புக்கு: 9443363828





ஜி.மஞ்சுளா

# பெண்களை அமைப்பாக்கியது கம்யூனிஸ்ட் கட்சி

**இந்தியாவில் பெண்கள் இயக்கத்தை கட்டியெழுப்பியதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு மகத்தான பங்களிப்பு உள்ளது. “பெண்கள் ஆண்களுடைய ஆட்டுவிப்பிற்காக படைக்கப்பட்டவர்கள் அல்ல. அவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்து இந்தியாவின் விடுதலைக்கு பாடுபட வேண்டும்” என காந்தி கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் பெருவாரியான பெண்கள் சுதந்திரப் போராட்டங்களில் பங்கேற்றது மறுக்க இயலாத உண்மை.**




இருப்பினும் சுதந்திரத்திற்கு முந்தைய காலகட்டத்தில் மிகுந்த தத்துவார்த்த மற்றும் அமைப்பு தெளிவுடன் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய போராட்டங்கள், அர்ப்பணிப்புகள் காரணமாக இந்தியா முழுமைக்குமான வலுவான, சுயமாக செயல்படும் பெண்கள் இயக்கத்தை கம்யூனிஸ்ட் கட்சியால் மட்டுமே கட்ட முடிந்தது.

1936 ல் கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டுதலுடன் உருவாக்கப்பட்ட அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் தேசிய மாநாடு 1939 டிசம்பரில் டெல்லியில் நடைபெற்ற போது அதில் மாணவிகள் மிக குறைவாகவே கலந்துக் கொண்டனர். எனவே மாணவர் பெருமன்றத்தில் பெண்கள் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

பெருவாரியான பெண்கள் கல்வி கற்பதற்கு கூட வெளிவராத அக்காலத்தில் மாணவிகளுக்கான அமைப்பை உருவாக்கும் செயல்திட்டத்தை கம்யூனிஸ்ட் கட்சி முன்னெடுத்தது மிகச் சிறப்பான ஒன்றாகும். அதன்பின் பல மாகாணங்களில் நடத்தப்பட்ட மாணவிகளுக்கான மாநாடுகள் மாணவிகள் அரசியல் படுத்தப்படுவதற்கும் அமைப்பாவதற்கும் அவர்களுக்கு பயிற்சி அளித்தன.

“போர்க்குணமிக்க இந்த பெண்கள் தான் இந்தியாவின் மாதர் இயக்கத்தின் முன்னோடிகள்” என ரேணுசக்கரவர்த்தி குறிப்பிடுகிறார்.

இங்கிலாந்தில் படித்து பட்டம் பெற்ற, பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இருந்த ரேணுசக்ரவர்த்தி 1939ல் இந்தியா வந்து தன்னை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைத்து கொண்டு பணியாற்றியவர். 1940ல் நடைபெற்ற அகில இந்திய மாணவிகள் மாநாட்டுக்கு தலைமையேற்றவர். பின்னாளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கவுன்சில் உறுப்பினராக, மத்திய கட்டுப்பாட்டுக் குழுவின் உறுப்பினராக. இந்திய நாடாளுமன்றத்தில் 1952–67 வரை உறுப்பினராக இருந்தவர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றுக்கணக்கான பெண் தலைவர்கள் மட்டுமல்ல. ஆயிரக்கணக்கான சாமான்ய பெண்களும் கட்சியின் வழிகாட்டுதலுடன் எத்தகைய வீரமிகு போராட்டங்களை நடத்தினர். மாதர் அமைப்பை கட்டி எழுப்பினர் என்பதை விளக்கி “இந்திய பெண்கள் இயக்கத்தில் கம்யூனிஸ்ட்கள்” என்ற அரிய நூலை எழுதியவர்.

அந்நூலில் “உழைக்கும் மக்கள் தமது முன்னேற்றத்துக்கு நடத்துகின்ற போராட்டங்களில் இருந்து பெண்கள் விடுதலைக்கான போராட்டத்தை பிரித்துப் பார்க்க முடியாது என்று கம்யூனிஸ்ட் கட்சி எனக்கு போதித்தது” என்பதை பதிவு செய்துள்ளார்.

உலக அளவில் இரண்டாம் உலகப் போர் துவக்கப்பட்டதாகவும், இந்திய அளவில் சுதந்திரப் போராட்டத்திற்கான போராட்டங்கள் உச்சத்தில் இருந்த ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் தான் வங்கத்தில் பெண்கள் இயக்கம் எழுச்சியுடன் கட்டியெழுப்பப்பட்டது. 1942 ல் கம்யூனிஸ்ட் கட்சியின் மீதான தடை அகற்றப்பட்டதால் கட்சி வெளிப்படையாக இயங்க ஆரம்பித்தது. அப்போது வங்கத்தில் ஏற்பட்ட உணவுப் பஞ்சத்திற்கு எதிரான இயக்கத்தை கம்யூனிஸ்ட்டுகள் நடத்தினர். அதில் பெண்களின் பங்கும், அதனுடே பெண்கள் இயக்கம் கட்டப்பட்டதும் ஒரு வீரக்காவியமாக திகழ்கிறது.

சுதந்திரத்திற்காக போராடிய தலைவர்கள் பலர் அப்போது சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். அதனால் காங்கிரசும், சோசலிஸ்ட் தலைவர்களும் முதலில் தலைவர்கள் விடுதலை, மற்ற பிரச்சனைகள் பிறகுதான் பேசமுடியும் என்றனர். ஆனால் மக்கள் நிலைமை படுமோசமாக இருந்தது, 1943 ம் ஆண்டில் உணவு பஞ்சத்தினால் ஒரு கோடி மக்கள் வாழ வழியில்லாமல் தங்கள் வீடு, நிலம் ஆகியவற்றை விட்டு குடிபெயர்ந்தார்கள்.

பேராசைக்கார வணிகர்கள் உணவுப் பொருட்களை பதுக்கி கொள்ளை லாபம் அடைந்தனர்.

அரிசி விலை 5 ல் இருந்து 50ஆக உயர்ந்திருந்தது. கிராமங்களில் அரிசி இல்லாமல் நகரத்துக்கு வந்த ஏழை விவசாயிகள் குப்பைத் தொட்டிகளில் விழுந்த எச்சில் இலைகளில் உணவைத் தேடினார்கள். தாய்மார்கள் கைக்குழந்தைகளுடன் தெருக்களில் செத்து மடிந்தனர். இத்தகைய சூழலில் தான் காங்கிரஸ், முஸ்லிம் லீக், இந்து மகாசபை ஆதரவாளர்களைக் கூட ‘பட்டினி கொடுமைக்கு எதிரான’ இயக்கத்தில் கொண்டு வருவதற்கு கம்யூனிஸ்ட்டுகள் பாடுபட்டார்கள்.

1942 செப்டம்பர் மாதத்தில் இருந்து கல்கத்தா நகரத்தின் சேரிகளில் கம்யூனிஸ்ட் பெண் தொண்டர்கள் நிவாரண வேலைகளை துவக்கினர். ரேசன் கடைகளில் கூடிய கூட்டத்தை ஒழுங்குபடுத்துதல், ரேசன் கடைகளை அதிகப்படுத்த கோரி சட்டசபை முற்றுகை, அரசாங்கம் ரேசன் கார்டுகளை கொடுத்து உணவுப் பொருட்களை வழங்க வேண்டும், உணவுக் கொடு என்ற முழக்கத்துடன் மாவட்ட நீதிபதி அலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் என்பது உட்பட பல்வேறு விதமான போராட்டங்களை மேற்கொண்டனர்.

அனைத்து போராட்டங்களிலும் ஆயிரக்கணக்கான பெண்கள் திரண்டனர். பெண்கள் மீது கட்டமைக்கப்பட்ட நிலப்பிரபுத்துவ விழுமியங்கள் அனைத்தும் இந்த இயக்கத்தின் ஊடே நொறுங்கி விழுந்தது. முன்பு பர்தா அணிந்த முஸ்லிம் பெண்கள் கோஷா உடை இல்லாமல் தெருவுக்கு வந்து ரேசன் கடை முன்னால் நிற்கும் பெண்களை ஒழுங்குபடுத்தினார்கள்.

1943 மற்றும் 1944 ல் இரண்டு மாநாடுகளையும் ‘வங்க மகிளா சமிதி’ நடத்தியது. உணவு நெருக்கடியைத் தீர்ப்போம். பாசிஸ்ட் படையெடுப்பை முறியடிப்போம், தேசிய தலைவர்களின் விடுதலைக்கு போராடுவோம் என்ற முழக்கங்களை முன்வைத்து மாநாடுகள் நடத்தப்பட்டன. அது மகிளா சமிதி கம்யூனிஸ்டுகளின் ஸ்தாபனம் அல்ல. எல்லா அரசியல் கருத்துகளையும் கொண்ட பெண்களும் பங்கெடுகின்ற ஸ்தாபனம் என்பதை மாநாடுகள் நிருபித்தன. இந்த இயக்கத்தின் ஊடே மத்தியதர வர்க்கத்தின் இயக்கமாக இருந்த மகிளா சமிதி ஏழைகள், விவசாய பெண்களின் இயக்கமாக மாறியது.

ஆனால் பல தடைகளும் இருந்தன. கம்யூனிஸ்ட்டுகளுடன் கூட்டாக வேலை செய்யக் கூடாது என்று வங்காள காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானம் கூட நிறைவேற்றப்பட்டது. ஆனால் எல்லா தடைகளையும் மீறி மகிளா சமிதியின் கிளைகள் மாநிலம் முழுவதும் ஆரம்பிக்கப்பட்டன. குடும்பத்தினரின் விமர்சனங்கள், எதிரிகளின் தாக்குதல்கள் அனைத்தையும் ஒதுக்கி தள்ளி எப்படி பெண்கள் மகிளா சமிதியை மாபெரும் ஸ்தாபனமாக வளர்த்தெடுத்தனர்?

சமுக கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட பெண்கள் மகளிர் இயக்கத்தின் தேவையை உணர்ந்தது எப்படி? திறமையான அமைப்பாளர்களாக அவர்கள் உருவானது எவ்வாறு?

களத்தில் செய்யும் பணியின் மூலம் பெண்கள் அனுபவ அறிவை பெறமுடியும். இருப்பினும் தத்துவார்த்த பயிற்சிக்கான முக்கியத்துவத்தை உணர்ந்திருந்த கம்யூனிஸ்ட் கட்சி, அந்த நெருக்கடியான காலகட்டத்திலும் மகிளா சமிதியின் அமைப்பாளர்களுக்கு பயிற்சி பள்ளிகள் நடத்தியது.

1943 பிப்ரவரி 22 முதல் மார்ச் 2 வரை நடைபெற்ற பயிற்சி பள்ளியில், போர்முனை நிலவரம், பாசிஸ்ட் யுத்தத்தை பற்றி கம்யூனிஸ்டுகளின் நிலை, தேசிய ஒற்றுமையைக் கட்டுதல், மாதர் இயக்கம் ஆகிய தலைப்புகளில் வகுப்புகள் நடைபெற்றன.

பார்வார்டு பிளாக், சோசலிஸ்டுகள், ஹிந்து மாகசபை ஆகிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மகிளா சமிதியில் தொண்டு செய்த கம்யூனிஸ்டு பெண்களைப் பற்றி அப்போது அருவருப்பான அவதூறுகள் செய்து வந்தனர். ஆனால் அதற்கு அஞ்சாமல் உழைக்கும் பெண்களின் பிரச்சனைகளை எடுத்துக் கொண்டு பெண்கள் தீவிரமாக பணியாற்றினார்கள். இதற்கான பலத்தை பயிற்சி பள்ளிகள் தான் வழங்கியது. இரண்டாவது மாநாட்டுக்கும், முன்றாவது மாநாட்டுக்கும் இடைப்பட்ட 18 மாதங்களில் வங்கத்தில் மகிளா சமிதி மக்களுடைய பேராதரவை பெற்று வளர்ச்சி அடைந்தது.


வங்கத்தின் தெபாகா, ஆந்திராவில் தெலுங்கானா ஆயுத போராட்டம், கேரளத்தின் புன்னபுரா வயலார், தமிழகத்தின் மில் தொழிலாளர்கள் போராட்டம், ஒன்றுபட்ட தஞ்சையின் நில உடமையாளர்களின் ஆதிக்கத்தை எதிர்த்த போராட்டம் தவிர இந்தியாவின் பல மாநிலங்களிலும் போராட்டங்களின் ஊடே மாதர் இயக்கம் கட்டியெழுப்பபட்டது.

கேரளத்தில் 1940–42 ஆம் ஆண்டுகளில் கம்யூனிஸ்ட்டுகள் தலைமறைவாக சென்றபோது பெண்கள் இயக்கத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டது, சுமார் ஆயிரம் கம்யூனிஸ்டுகள் தலைமறைவாக சென்ற போது மாநிலத்தில் சுமார் 4000–6000 பெண்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் வேலை திட்டத்தை மக்களிடம் கொண்டு சென்றார்கள்.

கம்யூனிட்டுகளின் சகோதரிகளும், மனைவிகளும் பெண்கள் மத்தியில் வேலை செய்து மாதர் இயக்கத்தை பலப்படுத்தினார்கள் என ரேணுசக்ரவர்த்தி குறிப்பிடுகிறார்.


நெருக்கடியான அந்த காலகட்டங்களில் கம்யூனிஸ்ட் கட்சியும் பெண்களும் ஆற்றிய பணிகள் இன்றைக்கும் நமக்கு பாடமாக உணர்வூட்டுபவையாக உள்ளது.

தொடர்புக்கு: 9790752080




டிசம்பர்–26 2022

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் துவக்க தினம்



தோழர், இரா நல்லகண்ணு பிறந்த தினம்
தோழர்.கே.டி. கே. தங்கமணி நினைவு தினம்

ஜனசக்தி சிறப்பிதழ் வாழ்த்துக்கள்





தலைவர்.K.சாரதாமணிகுமார்
மைலம்பட்டி ஊராட்சி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம்

AITUC, AISF, NFIW, TOPM

திரு.வி.க படிப்பகம், கரையாம்பாளையம், மைலம்பட்டி ஊராட்சி கிளைகள், நீலம்பூர் கிளை, சூலூர் வடக்கு ஒன்றியம், கோவை 62


இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
98ஆவது அமைப்பு தினம்
CPI
26.12.2022 திங்கள்கிழமை
அகில இந்திய 24-வது மாநாட்டின் தீர்மானங்களை விளக்கி
பட்டீஸ்வரம், தாராசுரம், காந்தி பூங்கா, மேலக்காவேரி,
மீன் மார்க்கெட், நாச்சியார்கோவில் உள்ளிட்ட மையங்களில்
தீர்மான விளக்க பொதுக்கூட்டம் மற்றும் கலைநிகழ்ச்சி நடைபெறும்.
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
கும்பகோணம் மாநகரம், கும்பகோணம் ஒன்றியம்


டிசம்பர் – 26
பாட்டாளி வர்க்கத்தின் பாதுகாவலன்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
துவக்க நாள்
தொழிலாளி – விவசாயி நலன் காக்க பாடுபடும்
இரா.நல்லகண்ணு
பிறந்த நாள்
பார் – அட் – லா பட்டம் பெற்றும்
பாட்டாளி நலன் காத்து நின்ற
கே.டி.கே.தங்கமணி
நினைவு நாள்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
ஏ.ஐ.டி.யு.சி
இந்திய மாதர் தேசிய சம்மேளனம்
தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்
தூத்துக்குடி மாவட்டம்

# ஜனசக்தி சிறப்பிதழ் சிறந்திட வாழ்த்துகிறோம்!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் (AIKS)
தொண்டாமுத்தூர் வடக்கு
## அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம்
## இந்திய மாதர் தேசிய சம்மேளனம்
தொண்டாமுத்தூர் ஒன்றியக் குழு

**என்.கணேசமூர்த்தி**
ஒன்றிய செயலாளர்

**வி.பி.ராமசாமி**
ஒன்றிய துணைச் செயலாளர்

**கே.ஆறுச்சாமி**
ஒன்றிய பொருளாளர்


**எம். நாகராஜன்**
மாவட்டக்குழு உறுப்பினர்


**ஆர்.செல்வநாயகி**
மாவட்டக்குழு உறுப்பினர்

ஒன்றியக்குழு உறுப்பினர்கள் :

**டி.எஸ்.வெங்கடாசலம், எஸ்.அண்ணாதுரை, ஏ.இந்திராணி, ஏ.முகம்மது அலி, என்.பல்ராம், என்.பாலசுப்பிரமணியம், எம்.ராமமூர்த்தி, என்.வி.சாமிநாதன், பி.அழகேசன், ஆர்.முருகன்**







## வாழ்த்துக்களுடன் ...

### கோவை கிழக்கு மண்டல குழு

| | | |
|---|---|---|
| ஒண்டிப்புதூர் கிளை | நீலிகோணாம்பளையம் கிளை | சிங்காநல்லூர் கிளை |
| உப்பிலிபாளையம் கிளை | சௌரிபாளையம் கிளை | பாலன்நகர் கிளை |
| ஜீவாமன்றம் கிளை | லட்சுமிபுரம் கிளை | V.R.புரம்மேடு கிளை |
| மசக்காளிபாளையம் கிளை | காளப்பட்டி கிளை | கரட்டுமேடு கிளை |
| வினோபாஜி நகர் கிளை | ஸ்ரீநகர் கிளை | B.R புரம் கிளை |
| M.K.மன்றம் கிளை | R.G புதூர் கிளை | கருப்பராயன்பாளையம் கிளை |
| நேருநகர் கிளை | பூங்காநகர் கிளை | அத்திக்குட்டை கிளை |
| S.I.H.S.காலனி கிளை | | |

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி துவக்க தினம்
## வாழ்த்துக்களுடன் ...





தோழர் **S. ஆறுமுகம்**
செயலாளர்,
55-வது டிவிசன்கிளை,
S.I.H.S. காலனி
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி






**கோவை கிழக்கு மண்டலம்**

CPI




புதியதோர் உலகம்
செய்வோம் கெட்ட
போரிடும் உலகத்தை
வேரோடு சாய்ப்போம்
பொதுவுடைமைக் கொள்கை
திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோடு அதை எங்கள்
உயிரென்று காப்போம்!

ஜனசக்தி சிறப்பிதழ்
சிறந்திட வாழ்த்துகிறோம் !

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
கோவை மேற்கு மண்டலக் குழு


CPI




ஒன்றுபட்டு போர் புரிந்தே
உயர்த்துவோம் செங்கொடியை
இன்றுடன் தீருமடா என் தோழனே
இம்சை முறைகளெல்லாம்!


ஜனசக்தி சிறப்பிதழ்
சிறந்திட வாழ்த்துகிறோம்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
காரமடை கிழக்கு ஒன்றியக் குழு













ஜனசக்தி சிறப்பிதழ்
சிறந்திட வாழ்த்துகிறோம்!

கோவை ஜில்லா மில்
தொழிலாளர் சங்கம்
பதிவு எண் : 84
99, ரங்கன் வீதி, காட்டூர், கோவை 9.




CPI மத்திய மண்டலம்
கோயம்புத்தூர்


கழக தலைவராக மீண்டும் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்ட
மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதியார் அவர்களையும்
கழக பொதுச்செயலாளர் துரைமுருகன்
கழக பொருளாளர் டி.ஆர்.பாலு
கழக முதன்மைச்செயலாளர் கே.என்.நேரு
கழக துணை பொதுச்செயலாளர்கள்
ஐ.பெரியசாமி க.பொன்முடி கனிமொழி கருணாநிதி
ஆ.இராசா அந்தியூர் செல்வராஜ்
ஆகியோரையும் வாழ்த்தி வணங்குகிறோம்..
மகாலட்சுமி முருகன் எம்.ஏ.எம்.பில்.,
உடுமலை ஒன்றியக்குழு பெருந்தலைவர்
கே.ஏ.சண்முகவடிவேல்
உடுமலை ஒன்றியக்குழு துணைத்தலைவர்
தே.திருமலைசாமி, நா.அருள்குமார், புவனேஸ்வரி சிவசங்கரன், திலகவதி பழனிக்குமார், கவிதாமணி ரங்கநாதன், கமலம் நவநீதகிருஷ்ணன், ம.விவேக், கே.வி.சங்கரன், ராஜேஸ்வரி ராமசாமி, கே.பி.குப்புச்சாமி, கமலவேணி முருகானந்தம், கா.செல்வராஜ், இரா.லாசர் சுவாமிநாதன், தங்கமணி ஜெயப்பிரகாஷ், சுமதி கார்மேகம்.
திராவிட முன்னேற்ற கழகம், உடுமலை ஒன்றியம்
திருப்பூர் தெற்கு மாவட்டம்


டிசம்பர் – 26
பாட்டாளி வர்க்கத்தின் பாதுகாவலன்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
துவக்க நாள்
தொழிலாளி – விவசாயி நலன் காக்க பாடுபடும்
இரா.நல்லகண்ணு
பிறந்த நாள்
பார் – அட் – லா பட்டம் பெற்றும்
பாட்டாளி நலன் காத்து நின்ற
கே.டி.கே.தங்கமணி
நினைவு நாள்
சிறப்பிதழ் சிறக்க வாழ்த்துகள்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
ஊத்துக்குளி தாலுகா குழு
திருப்பூர் புறநகர் மாவட்டம்


டிசம்பர் – 26
பாட்டாளி வர்க்கத்தின் பாதுகாவலன்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
துவக்க நாள்
தொழிலாளி – விவசாயி நலன் காக்க பாடுபடும்
இரா.நல்லகண்ணு
பிறந்த நாள்
பார் – அட் – லா பட்டம் பெற்றும்
பாட்டாளி நலன் காத்து நின்ற
கே.டி.கே.தங்கமணி
நினைவு நாள்
சிறப்பிதழ் சிறக்க வாழ்த்துகள்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
தாராபுரம் தாலுகா குழு
திருப்பூர் புறநகர் மாவட்டம்


டிசம்பர் – 26
பாட்டாளி வர்க்கத்தின் பாதுகாவலன்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
துவக்க நாள்
தொழிலாளி – விவசாயி நலன் காக்க பாடுபடும்
இரா.நல்லகண்ணு
பிறந்த நாள்
பார் – அட் – லா பட்டம் பெற்றும்
பாட்டாளி நலன் காத்து நின்ற
கே.டி.கே.தங்கமணி
நினைவு நாள்
சிறப்பிதழ் சிறக்க வாழ்த்துகள்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
அவினாசி ஒன்றியக் குழு
திருப்பூர் புறநகர் மாவட்டம்

மலர் சிறக்க வாழ்த்துக்கள் ...


# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

## சேலம் மாவட்ட இடைக்குழுக்கள் – நேரடி கிளைகள்

| | |
|---|---|
| * நங்கவள்ளி ஒன்றியக்குழு | * பனைமரத்துப்பட்டி – வீரபாண்டி ஒன்றியக்குழு |
| * ஆத்தூர் வட்டக்குழு | * கொண்டலாம்பட்டி மண்டலக்குழு |
| * சூரமங்கலம் மண்டலக்குழு | * தலைவாசல் – கெங்கவல்லி ஒன்றியக்குழு |
| * சேலம் ஒன்றியக்குழு | * அயோத்தியாப்பட்டணம் – வாழப்பாடி ஒன்றியக்குழு |
| * அம்மாப்பேட்டை மண்டலக்குழு | * பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியக்குழு |
| * அஸ்தம்பட்டி மண்டலக்குழு | * ஓமலூர் – காடையாம்பட்டி ஒன்றியக்குழு |
| * வழக்கறிஞர் கிளை | * பெத்தநாயக்கன்பாளையம் நகரக்குழு |
| * இன்சூரன்ஸ் கிளை | * மேட்டூர் – மேச்சேரி இடைக்குழு |

* தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்கம்

Handloom Mark



SILK MARK

# மாமல்லன் பட்டு

**கைத்தறி நெசவாளர் கூட்டுறவு**
**உற்பத்தி & விற்பனைச்சங்கம்லி,KH 3**

நெ.17,வழக்கறுத்தீஸ்வரர் கோயில்தெரு,
காஞ்சிபுரம்-631 501 தொடர்புக்கு: 044-2722 2807

கிளை விற்பனை நிலையம்: **யோகலஷ்மிசில்க்ஸ்,**
140,கிழக்கு வெளிவீதி, மதுரை-625001



**எம்.இலட்சுமணன்**
தலைவர்



**எஸ்.வி.சங்கர்**
து.தலைவர்



**கே.தணிகைவேல்**
இயக்குநர்



**சி.ராமலிங்கம்**
இயக்குநர்



**கே.பாரதி**
இயக்குநர்



**வி.கோவிந்தசாமி**
இயக்குநர்



**வி.மல்லிகா**
இயக்குநர்

**கூட்டுறவே நாட்டுயர்வு, கைத்தறி தொழிலையும்,**
**தொழிலாளரையும் பாதுக்காப்போம் கண்கவர்**
**காஞ்சிபட்டு சேலை,பாவாடைகள் சிறந்த ரகங்கள்**
**வாங்க வாரீர் ! வாரீர் !!**


புரட்சிகர வாழ்த்துக்கள்



# ஐ.சி.எப். யுனைடெட் ஒர்க்கர்ஸ் யூனியன் - ஏஐடியூசி

# ICF UWU AITUC









**டிசம்பர் – 26**

பாட்டாளி வர்க்கத்தின் பாதுகாவலன்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி**

தொழிலாளி – விவசாயி நலன் காக்க பாடுபடும்

**இரா.நல்லகண்ணு**

பார் – அட் – லா பட்டம் பெற்றும்
பாட்டாளி நலன் காத்து நின்ற

**கே.டி.கே.தங்கமணி**

புகழ் பரப்புவோம்

| | | |
|---|---|---|
| **C. ஸ்ரீகுமார்**<br>தலைவர் | **G.சரவணகுமார்**<br>பொதுச் செயலாளர் | **S.பாலாஜி**<br>பொருளாளர் |
| **T.ராஜேந்திரன்**<br>துணைத் தலைவர் | **S.நிக்சன் ஆபிரகாம்**<br>நிர்வாகத் தலைவர் | **R.இளையராஜா**<br>துணைத் தலைவர் |



AIBEA AIBEA



மக்கள்
பணியாற்றும்
ஜனசக்தி
மேலும் வளர வாழ்த்தும்

# தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

(இணைப்பு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம்)

AIBEA

சிங்கப்பூர் பிளாசா, 164, லிங்கி செட்டி தெரு,
சென்னை -600 001 ☎ 044 - 25331522

AIBEA AIBEA







# சிறப்பிதழ் சிறக்க வாழ்த்துகள்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம்
அனைத்திந்திய முற்போக்கு பேரவை
அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம்.
இந்திய மாதர் தேசிய சம்மேளனம்.
ஏ.ஐ.டி.யு.சி

கன்னியாகுமரி மாவட்டம்






போராட்டம், தியாகத்தின் வரலாறு,
வீரகாவியம் டிசம்பர் 26

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின்
துவக்கதினம்

தியாக சீலர் தோழர் நல்லக்கண்ணு அவர்களின் பிறந்ததினம்
புரட்சிகர தின பிறந்தநாள் வாழ்த்துக்கள்

தோழர்.கே.டி.கே.தங்கமணி நினைவு நாள்
வீரவணக்கம்

படியுங்கள் ஜனசக்தி தொழிற்சங்க செய்தி

கண்டோண்ட்மெண்ட் போர்டு தொழிலாளர்கள் சங்கம்,
காஞ்சிபுரம் மாவட்டம்,
தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்
காஞ்சிபுரம் மாவட்டம்
தமிழ்நாடு ஊரக வளர்ச்சி
ஊராட்சி ஒன்றிய பணியாளர்கள் சங்கம்
தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் சங்கம்
காஞ்சிபுரம் மாவட்டம், செல்: 9944369451
தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர்கள் சங்கம்
ஏஐடியுசி காஞ்சிபுரம் மாவட்டம்,செல்: 9444068864
சென்னை–செங்கை மாவட்ட
கைத்தறி நெசவாளர்கள் சங்கம்
காஞ்சிபுரம் மாவட்டம், செல்; 9952676955
காஞ்சிபுரம் மாவட்டம் பாத்திர தொழிலாளர்கள் சங்கம்

படியுங்கள் NEW AGE

ஏ.ஐ.டி.யு.சி.காஞ்சிபுரம் மாவட்டம்



## சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியில்
## 2021-22 முதல் 2022-23 வரை மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் விவரம்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | பொதுநிதி திட்டம் | 2 | 12.00 |
| 2. | 15வது நிதிக்குழு மான்யம் (டைய்டு மற்றும் அன்டைய்டு மான்யம்) திட்டம் | 8 | 93.50 |
| 3. | நமக்கு நாமேத்திட்டம் | 2 | 39.87 |
| 4. | சாலை பாதுகாப்பு நிதி | 1 | 5.00 |
| 5. | நபார்டு XXVII | 2 | 174.00 |
| 6. | கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் | 4 | 526.60 |
| 7. | தூய்மை இந்தியா திட்டம் | 2 | 40.00 |
| 8. | அம்ரூத் (AMRUT) 2.0 திட்டம் | 2 | 118.50 |
| | | 23 | 1009.47 |

திரு.**பா.இராதாகிருஷ்ணன்**
செயல்அலுவலர், திருப்பத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி, சிவகங்கை மாவட்டம்.

திருமதி.**நா.கோகிலாராணி**, பி.காம்.,
தலைவர், திருப்பத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி, சிவகங்கை மாவட்டம்.

திருமதி.**து.ரேணுகாதேவி** தலைமை எழுத்தர்.

திரு.**ரா.கான்முகமது** பேரூராட்சி மன்ற துணைத்தலைவர்.

### பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள்

திரு.**நா.சையது முகமது, இப்ராகிம்**, 1வது வார்டு.
திரு.**சி.நேரு**, 2வது வார்டு.
திரு.**சை.அபுதாஹிர்**, 3வது வார்டு.
திருமதி.**ச.கோமதி**, 5வது வார்டு.
திருமதி.**ஹ.சரண்யா**, 6வது வார்டு.
திரு.**சு.கண்ணன்**, 7வது வார்டு.
திருமதி.**பி.ஷமீம்**, 8வது வார்டு.
திருமதி.**சோ.சாந்தி**, 9வது வார்டு.
திரு.**சோ.சீனிவாசன்**, 10வது வார்டு.
திருமதி.**பா.இராஜேஸ்வரி**, 12வது வார்டு.
திரு.**போ.சரவணன்**, 13வது வார்டு.
திரு.**அ.பஷீர் அகமது**, 14வது வார்டு.
திருமதி.**க. ஏகாம்பாள்**, 15வது வார்டு.
திருமதி.**தா.ரெமி**, 16வது வார்டு.
திருமதி.**தி.நாகமீனாள்**, 17வது வார்டு.
திரு.**சி.பாண்டியன்**, 18வது வார்டு.


சென்னை, ரெட்ஹில்ஸ் அருகே,
வாணியன்சத்திரத்தில்
உடனே வீடு கட்ட ஏற்ற இடம்,
பட்டா மனை, மின்சாரம்,
குடிநீர் வசதி உள்ளது,
ஒரு சதுர அடி
விலை ரூ.950
சுபமங்களா
எண்டர்பிரைசஸ்
102, கவியரசு கண்ணதாசன் நகர்,
1வது பிளாக், சென்னை – 118
(பஸ் டிப்போ அருகில்)
செல்: 9940313678
9840508084


இந்தியக்
கம்யூனிஸ்ட் கட்சி
துவக்க தினம்
தோழர் இரா.நல்லகண்ணு
பிறந்த தினம்
தோழர் கே.டி.கே.தங்கமணி
நினைவு தினம்
சிறப்பிதழ்
சிறக்க
வாழ்த்துகள்
M.ரேணுகா B.E.,
42வது வட்ட மாமன்ற உறுப்பினர்
சென்னை மாநகராட்சி
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, வடசென்னை மாவட்டம்


தமிழ்நாடு அரசு கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் கீழ் இயங்கும் பட்டு கூட்டுறவு சங்கம்
முகூர்த்த பட்டுக்கு முதல் தேர்வு
PURE SILK
KANCHIPURAM
SILK SARIS
ORIGINAL ZARI
SINCE 1955
KAMAKSHIAMMAN
CO-OP SILK
KANCHIPURAM PURE SILK SAREES
SILK MARK
31.03.2017க்கு முன் நெசவு
செய்யப்பட்ட அனைத்து பட்டு ரகங்களுக்கும்
சிறப்பு தள்ளுபடி 10%
(உச்சவரம்பு ரூ.500/-)
மற்றும் சங்கத்தின் தள்ளுபடி
20% - 65%
காஞ்சிபுரம்
காமாட்சி அம்மன்
பட்டு கூட்டுறவு சங்கம்
G1612
காஞ்சிபுரம்: 044 27222196, சென்னை: 044 28192851
மற்றும் தமிழகமெங்கும்
திரு.த.ஆனந்த்
உதவிஇயக்குநர்/நிர்வாகஇயக்குநர்
திரு.N.P.ஜெயராமன்
உபதலைவர்
திரு.பா.ஸ்டாலின்
தலைவர்
இயக்குநர்கள்
திருமதி.R.மேகலா திருமதி.T.தேன்மொழி
திரு.J.கமலநாதன் திரு.E.முத்துக்குமார் திரு.C.மகேந்திரன்


டிசம்பர் 26
1925
ஏழைகளுக்கு
ஜனநாயகம் என்பது
ஒடுக்குமுறையாகவும்,
பணக்காரர்களுக்கு
ஜனநாயகமாகவும் இருக்கும்.
இதுவே முதலாளித்துவ
ஜனநாயகம்
– ம.சிங்காரவேலர்
எம்.செல்வராஜ் எம்.பி.
நாகை நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர்
திருவாரூர், நாகை, மயிலாடுதுறை மாவட்டங்கள்

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 24.12.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57




Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.